بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 15

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

12 ரமலான் 1443 ஹிஜ்ரி கமரி 14 ஷஹாதத் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 14 ஏப்ரல் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ
هُدًی لِّلنَّاسِ وَبَیِّنٰتٍ مِّنَ الۡهُدٰی وَالۡفُرۡقَانِ ۚ
فَمَنۡ شَهِدَ مِنۡکُمُ الشَّهۡرَ فَلۡیَصُمۡهُ

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப் பெற்ற மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக் கூடியதும் (நன்மை தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். (2:186)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ என்ற வசனத்திலிருந்து ரமலான் மாதத்தின் மகத்துவம் தெரிய வருகின்றது. இந்த மாதம் உள்ளத்தை ஒளியூட்டுவதற்கு சிறந்த மாதமாகும் என்று சூஃபிமார்கள் எழுதியுள்ளார்கள். தொழுகை உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றது. நோன்பு உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

மக்ரிப் தொழுகைக்கு சில நிமிடங்களுக்கு முன்னால் ரமலான் மாத பிறை பார்க்கப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மக்ரிப் தொழுகையை நிறைவேற்றிய பிறகு பிறையை பார்ப்பதற்காக பள்ளிவாசலின் மேல் தளத்திற்கு சென்று விட்டார்கள். மேலும் பிறையை பார்த்து விட்டு பின்னர் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: கடந்த ரமலான் எப்படி தெரிகின்றது என்றால் நேற்றைய நாள் கடந்தது போன்று தெரிகின்றது. شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ என்ற வசனத்திலிருந்து ரமலான் மாதத்தின் மகத்துவம் தெரிய வருகின்றது. இந்த மாதம் உள்ளத்தை ஒளியூட்டுவதற்கு சிறந்த மாதமாகும் என்று சூஃபிமார்கள் எழுதியுள்ளார்கள். தொழுகை உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றது. நோன்பு உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது. நோன்பு தூய்மை பெறுவதன் பொருள் என்னவென்றால், தீமையின் பக்கம் சாய்க்கும் ஆன்மாவின் இச்சைகளிலிருந்து விடுதலை பெறுவதாகும். உள்ளத்தை ஒளியூட்டுதல் என்பதன் பொருள் என்னவென்றால், இறைவனைப் பார்த்து விடும் அளவில் அவர் மீது ஆன்மீக காட்சியின் வாசல் திறக்கப்படுவதாகும். எனவே اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ என்பதில் இந்த கருத்தே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நோன்பிற்கு மகத்தான கூலி உள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் நோய்களும், (தவறான) நோக்கங்களும் இந்த அருட்கொடையிலிருந்து மனிதனை இழப்பிற்குரியவராக ஆக்கி விடுகின்றன

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 424 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**நோன்பின் ஒரு பயன் என்னவென்றால், மனிதனுக்கு இறைவனுடன் உயர்தரமான தொடர்பு ஏற்பட்டு விடுகின்றது. இறைவன் சுயமே அவரது பாதுகாவலராக ஆகி விடுகின்றான்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நோன்புகளின் ஓர் ஆன்மீக பயன் இதுவும் ஆகும். அதாவது அதன் மூலம் மனிதன் இறைவனுடன் ஒப்புமையை மேற்கொண்டு விடுகிறான். இறைவனின் ஒரு பண்பு என்னவென்றால், அவன் தூக்கத்திலிருந்து தூயவன் ஆவான். மனிதன் தனது தூக்கத்தை முற்றிலும் விட்டு விட முடியாது. ஆனால் அவன் தனது தூக்கத்தின் ஒரு பகுதியை நோன்புகளில் இறைவனுக்காக நிச்சயம் தியாகம் செய்கின்றான். சஹ்ரி உண்பதற்காக எழுகின்றான் தஹஜ்ஜுத் தொழுகின்றான். நோன்புகள் வைக்காத பெண்களும் கூட சஹ்ரி ஏற்பாட்டிற்காக விழிக்கின்றனர். துஆக்களிலும், தொழுகைகளிலும் சிறிது நேரம் செலவிட நேரிடுகின்றது. இவ்வாறு இரவின் மிகக் குறைந்த பகுதியே தூக்கத்திற்காக எஞ்சியிருக்கின்றது. பணி செய்பவர்களுக்கு கோடை நாட்களில் 2, 3 மணி நேரம் மட்டுமே தூக்கத்திற்காக எஞ்சியிருக்கின்றது. இவ்வாறு மனிதன் அல்லாஹ்வுடன் ஒப்புமையை ஏற்படுத்திக் கொள்கிறான். அதேபோன்று அல்லாஹ் உண்பதிலிருந்தும், குடிப்பதிலிருந்தும் தூயவன் ஆவான். மனிதனால் உணவையும், பானத்தையும் முற்றிலும் விட்டு விட முடியாது. ஆயினும் ரமலானில் அல்லாஹ்வுடன் அவன் ஒரு வகையான ஒப்புமையை நிச்சயம் உருவாக்கிக் கொள்கின்றான். பின்னர் அல்லாஹ்விடமிருந்து எவ்வாறு நன்மை மட்டுமே வெளிப்படுகின்றதோ அதேபோன்று நோன்பின் நாட்களில் குறிப்பாக நன்மைகள் செய்வதற்கு கட்டளை உள்ளது. எந்த நபர் புறம்பேசுதல், தீய பேச்சுக்கள் போன்ற தீய விஷயங்களிலிருந்து விலகுவதில்லையோ அவரது நோன்பு நோன்பாக இருக்காது. ஆக தன்னிடமிருந்து நன்மை மட்டுமே வெளிப்பட வேண்டும் என்றும் புறம்பேசுதல் மற்றும் சண்டையிடுதலிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் நம்பிக்கையாளர் முயற்சி செய்கின்றார். இவ்வாறு எந்த அளவுக்கு இறைவனுடன் ஒப்புமையை உருவாக்கிக் கொள்ள முடியுமோ உருவாக்கிக் கொள்கின்றான். நோன்பின் ஒரு பயன் என்னவென்றால், மனிதனுக்கு இறைவனுடன் உயர்தரமான தொடர்பு ஏற்பட்டு விடுகின்றது. மேலும் இறைவன் சுயமே பாதுகாவலனாக ஆகி விடுகின்றான். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 378 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

ரமலான் மாதத்தின் சிறப்புகள்

1898. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ரமலான் வந்து விட்டால் சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன.

1899: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ரமலான் மாதம் வந்து விட்டால் வானத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான் விலங்கிடப்படுகின்றான்.

1901: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

லைலத்துல் கத்ரில் நம்பிக்கை வைத்தவாறு நன்மையை எதிர்பார்த்து, எவர் ஒருவர் இறைவணக்கத்திற்காக நிற்பாரோ அவரது முன், பின் பாவம் மன்னிக்கப்படும். ரமலானில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்றவர்களின் முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்.

(சஹீஹ் புகாரி தொகுதி 3, பாடம் நோன்பு – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 25 பிப்ரவரி & 11 மார்ச் 2022*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 மார்ச் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு அமான் மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் எதிர்கொண்ட கடினங்களைக் குறித்த நற்குறிப்பு நடைபெற்று வந்தது. அவற்றில் முதலாவதாக எடுத்துரைக்கப்பட்ட கடினம் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின் துன்பமாகும். ஒவ்வொரு முஸ்லிமிற்கும் அந்த துன்பம் இருந்தது. ஆனால் குழந்தைப் பருவம் முதலே தோழராக இருந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எல்லாரையும் விட அதிகமாக துன்பம் ஏற்பட்டிருந்தது. அதுமட்டுமின்றி அன்னார் (ரலி) அவர்கள் நன்றியுணர்வின் உயர் அந்தஸ்தில் இருந்தார்கள். பைஅத்தின் பொருளின் ஆழத்திற்கு சென்று அதை புரிந்து வைத்திருந்தார்கள். அந்த புரிதல் வேறு எவருக்கும் இருக்கவில்லை. எனவே அந்நேரத்தில் அன்னார் (ரலி) அவர்கள் பெரும் துணிவையும், ஈமானையும் வெளிப்படுத்தினார்கள்.

முதலாவது அபாயகரமான கட்டம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின் துன்பமாக இருந்தது என்று எடுத்துரைக்கப்பட்டது. அந்த துன்பத்தின் காரணமாக அனைத்து சஹாபிகளும் பித்துப் பிடித்தவர்களைப் போன்று ஆகிக் கொண்டிருந்தார்கள். மரணத்தின் அந்த திடீர் துன்பத்தால் எவரும் தன்னை கட்டுப்படுத்த முடியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரிவைப் பற்றி எவரும் கற்பனை கூட செய்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின் பிரிவு என்பது எந்த அளவிற்கு கடுமையானதாகவும், வேதனைமிக்கதாகவும் இருந்ததென்றால் பெரும் பெரும் சஹாபிகள் அந்த துன்பத்தால் பாதிக்கப்பட்டு சுய நினைவை இழந்திருந்தார்கள்.

அன்பின் அந்த பித்துப் பிடித்த தன்மையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற வீரரின் நிலை இன்னும் மோசமாக இருந்தது. அன்னார் (ரலி) வாள் ஏந்திக் கொண்டு நின்றிருந்தார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று எவராவது கூறினால் நான் அவரது தலையை உடலிலிருந்து துண்டித்து விடுவேன் என்று கூறினார்கள். முஸ்லிம்கள் இந்த விஷயத்தை கேட்டு விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையில் மரணித்து விட்டார்களா? இல்லையா? என்ற ஐயம் மிகுந்த நிலைமையில் மூழ்கி விட்டார்கள். இந்த அன்பர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தில் ஏகத்துவத்தின் அடிப்படை பாடத்தை கூட மறந்து விட்டு, இல்லை! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் மரணிக்க மாட்டார்கள். மரணிக்கவும் இல்லை என்று கூறத் தொடங்கி விடுவது சாத்தியமானதாக இருந்தது.

அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவிக்கு வருகை தந்தார்கள். மேலும் அங்கு ஒன்றுகூடியிருந்த அனைத்து மக்களையும் நோக்கி இவ்வாறு கூறினார்கள்:

مَنْ كَانَ مِنْكُمْ يَعْبُدُ مُحَمَّدًا فَإِنَّ مُحَمَّدًا قَدْ مَاتَ،

وَمَنْ كَانَ مِنْكُمْ يَعْبُدُ اللّٰهَ فَإِنَّ اللّٰهَ حَيٌّ لَا يَمُوْتُ

பொருள்: மக்களே! எவர் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்கி வந்தாரோ அவர் கேட்டுக் கொள்ளட்டும். முஹம்மது (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். மேலும் எவர் அல்லாஹ்வை வணங்கி வந்தாரோ அவர் மகிழ்ச்சி கொள்ளட்டும். அல்லாஹ் உயிருடன் இருக்கின்றான். அவன் ஒருபோதும் மரணிக்க மாட்டான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்னார் (ரலி) அவர்களுக்கு எல்லையற்ற அன்பு இருந்தது. மேலும் அந்த அன்புடன் வேறு எவரும் போட்டி போடவும் முடியாது. அவ்வாறிருந்தபோதிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஏகத்துவ பாடத்தை கற்பித்தார்கள்.
பின்னர் இவ்வாறு கூறினார்கள்:

وَ مَا مُحَمَّدٌ إِلَّا رَسُوْلٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ

أَفَإِنْ مَّاتَ أَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰى أَعْقَابِكُمْ

பொருள்: முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே அன்றி வேறில்லை. அன்னாருக்கு முன் தோன்றிய தூதர்கள் அனைவரும் மரணித்து விட்டனர். அவ்வாறிருக்க அன்னார் (ஸல்) அவர்கள் எப்படி மரணிக்காமல் இருப்பார்கள். அன்னார் (ஸல்) மரணித்து விட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டு விட்டாலோ நீங்கள் உங்களது குதிகால்களில் ஓடி விடுவீர்களா? மேலும் இஸ்லாத்தை விட்டு விடுவீர்களா?

இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உயர்ந்த தைரியத்துடனும், நுட்பமான ஞானத்துடனும் அந்த நேரத்தில், துன்பமான அந்த நிலைமையில் சஹாபிகளுக்கு நம்பிக்கையூட்டினார்கள். மேலும் வேதனையால் பாதிக்கப்பட்டிருந்த அந்த அன்பர்களின் உள்ளங்களுக்கு மருந்து போடுவதற்கு காரணியாக அமைந்தார்கள். மற்றொரு பக்கம் ஆட்டம் கண்டு கொண்டிருந்த ஏகத்துவத்தின் கட்டடத்தை நிலைநிறுத்தினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல் உள்ளது. அதில் அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜீவிதம் தொடர்பாக சில சஹாபிகளின் உள்ளங்களில் இருந்த எண்ணங்கள் குறித்து ஒரு பொதுக் கூட்டத்தில் திருக்குர்ஆன் வசனத்தின் ஆதாரத்தை எடுத்து வைத்து அந்த அனைத்து எண்ணங்களையும் அன்னார் (ரலி) அகற்றி விட்டார்கள். அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் (ஈஸா) தொடர்பாக முழுமையாக சீர்தூக்கிப் பார்க்காததன் விளைவாக சிலரின் உள்ளங்களில் உருவாகி இருந்த தவறான எண்ணங்களையும் அன்னார் (ரலி) அகற்றி விட்டார்கள். (தஹ்ஃபா கோல்டவிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 184)

இரண்டாவதாக அன்னாருக்கு ஏற்பட்டிருந்த மாபெரும் துன்பம் அல்லது அன்னார் செய்த மாபெரும் பணி இதுவாகும். அதாவது அன்னார் எதிரிகளை கட்டுப்படுப்படுத்தினார்கள் அல்லது அவர்களுக்கு எவ்வாறு முடிவு கட்டினார்கள்? என்பதாகும். கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில் முஸ்லிம் சமுதாயத்தை ஒற்றுமையின் சரடில் பிணைத்து விட்டார்கள். இது அன்னார் (ரலி) செய்த இரண்டாவது மாபெரும் பணியாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு இரண்டாவது ஒரு சாத்தியமான அபாயம் உருவானது. அது என்னவென்றால், சகீஃபா பனூ சாயிதா எனும் இடத்தில் அன்ஸார் சகோதரர்களின் கூட்டம் நடந்தது. அந்த கூட்டத்தின் தொடக்கத்தில் அன்ஸார் சகோதரர்கள் முஹாஜிர்களிலிருந்து எவரையும் தமது அமீர் அல்லது கலீஃபாவாக ஒப்புக் கொள்வதற்கு தயாராக இருக்க மாட்டார்கள் என்றே தோன்றியது. முஹாஜிர்களும் அன்ஸார் சஹாபிகளில் ஒருவரை கலீஃபாவாக ஆக்கிக் கொள்வதற்கு தயாராக இல்லை. விஷயம், கருத்து வேறுபாடுமிக்க சொற்பொழிவுகளை கடந்து வாள் வரை சென்றடைவதற்கு அருகில் இருந்தது. அந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நாவில் அல்லாஹ் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினான். ஏனைய மக்களின் உள்ளங்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பக்கம் ஈர்த்தான். எந்த அளவுக்கென்றால் அங்கு ஏற்பட்டிருந்த அனைத்து பிரிவினைகளும், கருத்து வேறுபாடுகளும் மீண்டும் ஒரு முறை அன்பு மற்றும் ஒற்றுமையில் மாற்றப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு யூஷஃ பின் நூன் அவர்களின் கூற்றுகளை பனீ இஸ்ராயீல் செவிமடுத்து எந்தவொரு கருத்து வேறுபாடும் கொள்ளாததைப் போன்று அனைவரும் தமது கட்டுப்படுதலை வெளிப்படுத்தினர். அதே சம்பவம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் நேரிட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

பிரிவின் வேதனையால் அனைவரும் கண்ணீர் சிந்தியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தை உளப்பூர்வமாக ஒப்புக் கொண்டு விட்டார்கள். (தஹ்ஃபா கோல்டவிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 186)

மூன்றாவது முக்கியமான விஷயம், ஒரு பெரும் குழப்பம் ஆகும். அதனை எதிர்கொள்வது மிகவும் அவசியமாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த பணியை எவ்வாறு நிறைவேற்றினார்கள்? என்று பாருங்கள். அதாவது உஸாமா படையை அனுப்பி வைப்பது தொடர்பான விஷயமாக அந்த குழப்பம் இருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அந்தப் படையை சிரியாவின் எல்லைகளில் ரோமானியர்களுடன் போர் புரிவதற்காக தயார் செய்திருந்தார்கள். மோதா போர் மற்றும் தபூக் போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அச்சம் ஏற்பட்டிருந்தது. அதாவது ரோம் வாசிகள் இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத்திற்கு மத்தியில் அதிகரித்து வரும் கருத்து வேறுபாடுகள் மற்றும் யூதர்களின் குழப்பங்களின் காரணமாக அரபுவாசிகள் மீது ரோமானியர்கள் தாக்குதல் தொடுத்து விடக் கூடாது என அன்னார் (ஸல்) அஞ்சினார்கள்.

மூதா போரில் ஹஸ்ரத் ஸைது (ரலி), ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) ஆகியோர், அதாவது முஸ்லிம்களில் மூன்று அமீர்மார்களும் ஒருவருக்குப் பிறகு ஒருவராக ஷஹீதாகி விட்டார்கள். மூதா நகரம் என்பது உர்தன் பகுதியின் கிழக்கில் அமைந்துள்ள ஒரு வனாந்திர பூமியை கொண்டுள்ள நகரமாகும்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 123 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இது குறித்து ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களுக்கு ஹஸ்ரத் ஸைத் (ரலி), ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) ஆகியோரின் மரணத்தைப் பற்றிய செய்தியை வழங்கினார்கள். அதுபற்றி எந்தவொரு செய்தியும் வருவதற்கு முன்னரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த செய்தியை கூறி இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸைது கொடியை வாங்கினார். பின்னர் ஷஹீதாகி விட்டார். பின்னர் ஜாஃபர் கொடியை பிடித்தார். அவரும் ஷஹீதாகி விட்டார். பின்னர் இப்னு ரவாஹா கொடியை பிடித்தார். அவரும் ஷஹீதாகி விட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறுதியில் அல்லாஹ்வின் வாள்களில் ஒரு வாளான அதாவது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கொடியை வாங்கினார்கள். எந்த அளவுக்கென்றால் அல்லாஹ் அந்த எதிரிகளின் மீது வெற்றியை அன்னாருக்கு வழங்கினான். (சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிப், பாப் மனாகிப் காலித் பின் வலீத் (ரலி) ஹதீஸ் எண் 3757)

இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு தபூக் போருக்காக புறப்பட்டுச் சென்றார்கள். ஆயினும் எதிரிகளுக்கு மைதானத்திற்கு வந்து முஸ்லிம்களை எதிர் கொள்வதற்கான துணிவு இருக்கவில்லை. எனவே அவர்கள் சிரியாவின் உள்பகுதிகளில் நுழைந்து முஸ்லிம்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதையே தமது நன்மையாக கருதினார்கள். இந்தப் போர்களின் காரணமாக முஸ்லிம்களைக் குறித்த ரோமானியர்களின் எண்ணங்கள் மிகவும் அபாயகரமாக இருந்தன. அவர்கள் அரபு நாட்டினுடைய எல்லையை தாண்டுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். இதன் காரணமாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஸாமா அவர்களை தற்காப்பு நடவடிக்கைக்காக சிரியாவிற்கு புறப்படுவதற்கு கட்டளை வழங்கி இருந்தார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 124 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

மூதா போரில் ஷஹீதானவர்கள் சார்பாக பழிவாங்குவதும் ஒரு நோக்கமாக இருந்தது. உஸாமா படையின் தயாரிப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக சனிக்கிழமையன்று முழுமை அடைந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோயுறுவதற்கு முன்பாகவே அதன் ஏற்பாடுகள் துவங்கி இருந்தன. அன்னார் (ஸல்) அவர்கள் ஸஃபர் மாதத்தின் இறுதியில் ரோமானியர்களுடன் போர் புரிவதற்கு தயாராகும்படி கட்டளை வழங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும் நீங்கள் உங்களது தகப்பனார் ஷஹீதாக்கப்பட்ட இடத்தை நோக்கி புறப்பட்டு விடுங்கள். அவர்களை குதிரைகளால் நசுக்கி விடுங்கள். நான் உங்களை இந்தப் படைக்கு அமீராக நியமித்துள்ளேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

(ஃபத்ஹுல் பாரி லி இப்னீ ஹிஜ்ர் என்ற நூல் தொகுதி 8 பக்கம் 192)

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. அதாவது பல்கா வாசிகள் மற்றும் ரோமானியர்களை குதிரைகளின் மூலமாக நசுக்கி விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது இவர்கள் எப்படிப்பட்ட மக்கள் என்றால் அவர்கள் போர் செய்ய விரும்புகின்றார்கள். எனவே அவர்களுடன் நல்ல முறையில் போர் புரியுங்கள்.

பல்கா என்பது சிரியா நாட்டில் அமைந்துள்ள ஒரு பகுதியாகும். அது டமாஸ்கஸ் மற்றும் வாதியுல் குரா ஆகியவற்றிற்கு மத்தியில் அமைந்துள்ளது. தாருர் ரோமைப் பற்றி இவ்வாறு அறிமுகம் எழுதப்பட்டுள்ளது: அதாவது அது எகிப்து செல்லும் வழியில் பாலஸ்தீனத்தில் காஸாவிற்குப் பிறகு அமைந்துள்ள ஓர் இடமாகும்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 224 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் சிரியா நாட்டை நோக்கி புறப்படும்படி கட்டளையிட்டவாறு அன்னார் (ஸல்) அவர்கள் பொழுது விடிந்ததும் உப்னாவாசிகள் மீது தாக்குதல் தொடுங்கள் என்று கூறினார்கள். உப்னா என்பது சிரியா நாட்டில் பல்கா எனும் இடத்தின் பக்கம் அமைந்துள்ள ஓர் இடத்தின் பெயராகும். வேகமாக பயணத்தை மேற்கொள்ளுங்கள். அப்போது தான் தாக்குதல் உங்களை வந்தடைவதற்கு முன்பாக நீங்கள் அவர்களை சென்றடைய முடியும். அல்லாஹ் உங்களுக்கு வெற்றியை வழங்குவானாக. அவ்வாறு வெற்றி வழங்கினால் அங்கு குறைவான நேரம் தங்கி இருங்கள். உங்களுடன் வழிப்பாதையை காட்டிக் கொடுப்பவரையும் அழைத்துச் செல்லுங்கள். ஒற்றர்களையும், உளவாளிகளையும் உங்களுக்கு முன்னால் அனுப்பி வைத்து விடுங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களுக்காக தமது கரங்களால் ஒரு கொடியை கட்டினார்கள். பின்னர் கூறினார்கள்: அல்லாஹ்வின் பெயரால் இந்தப் போரில் அவனது வழியில் ஜிஹாத் செய்யுங்கள். அல்லாஹ்வை நிராகரித்தவருடன் போர் புரியுங்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் அதனை அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களால் கட்டப்பட்டிருந்த கொடியை வாங்கிக் கொண்டு புறப்பட்டார்கள். மேலும் அதனை ஹஸ்ரத் புரைதா பின் ஹுஸைத் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும் ஜுர்ஃப் என்ற இடத்தில் படையை ஒன்று கூட்டினார்கள். ஜுர்ஃப் என்பது மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் வடக்கு பக்கமாக அமைந்துள்ள ஓர் இடமாகும்.

எவ்வாறிருப்பினும் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் சகோதரர்களில் கண்ணியமிக்க எவரும் பின்தங்கி இருக்கவில்லை. ஆனால் போர் புரிவதற்காக அவர் அழைக்கப்பட்டார். அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் சயீத் பின் ஸைது (ரலி), ஹஸ்ரத் கதாதா பின் நுஃமான் (ரலி), ஹஸ்ரத் ஸலமா பின் அஸ்லம் (ரலி) ஆகிய அனைவரும் பங்கு பெற்றிருந்தார்கள்.

இந்த சிறுவர் முதன்மையான முஹாஜிர்களுக்கு அமீராக ஆக்கப்பட்டுள்ளார் என்று சிலர் பேசினர். அதனை செவியுற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கோபமுற்றார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் தனது தலையை ஒரு கைக்குட்டையால் கட்டி இருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் ஒரு போர்வையை போர்த்தி இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் ஒரு சொற்பொழிவு மேடை மீது ஏறி நின்று அல்லாஹ்வின் புகழையும், கண்ணியத்தையும் எடுத்துரைத்த பிறகு, மக்களே! உஸாமாவை அமீராக்கியது தொடர்பாக உங்களில் சிலர் பேசிய கூற்றுகள் என்னை வந்தடைந்துள்ளன. உஸாமாவை அமீராக்கியதில் நீங்கள் ஆட்சேபனை செய்துள்ளீர்கள் என்றால் இதற்கு முன்பு அவரது தந்தையை எனது அமீராக நியமனம் செய்தது தொடர்பாகவும் ஆட்சேபனை செய்திருக்கின்றீர்கள்.

இறைவன் மீது ஆணையாக! அவர் அமாரத்திற்கு (தலைமைப் பதவிக்கு) தகுதியானவராக இருந்தார். அவருக்குப் பிறகு அவரது மகனும் அமாரத் (தலைமைப் பதவிக்கு) தகுதியானவர் ஆவார். மேலும் அவர் எனக்கு மிகவும் நேசத்திற்குரிய மக்களைச் சார்ந்தவர் ஆவார். நிச்சயமாக இந்த இருவரும் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களைக் குறித்து எல்லா வகையான நன்மையான மற்றும் நல்ல எண்ணங்களை கொள்ள முடியும். எனவே உஸாமாவைக் குறித்து நல்ல விருப்பங்களை பின்பற்றுங்கள். ஏனென்றால் இவர் உங்களில் மிகச் சிறந்த மக்களைச் சார்ந்தவர் ஆவார்.

அந்த நாள் ரபீவுல் அவ்வல் 10 ஆம் தேதி

சனிக்கிழமையாக இருந்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த விஷயமாகும். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களுடன் புறப்பட இருந்த முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து விடை பெற்று படையில் பங்கு பெறுவதற்காக ஜுர்ஃப் என்ற இடத்திற்கு சென்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோய் அதிகரித்து விட்டது. ஆயினும் உஸாமாவின் படையை அனுப்புங்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமையன்று இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு வேதனை (நோய்) இன்னும் அதிகரித்து விட்டது. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் படையிலிருந்து திரும்பி வந்தார்கள். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் சுயநினைவற்ற நிலையில் இருந்தார்கள். அந்த நாள் மக்கள் அன்னார் (ஸல்) அவர்களுக்கு மருந்தை பருகச் செய்தார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் தலையை குனிந்து இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு முத்தம் கொடுத்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களால் பேச முடியாமல் இருந்தது. ஆனால் அன்னார் (ஸல்) அவர்கள் தமது இரு கரத்தையும் விண்ணை நோக்கி உயர்த்தினார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் தலை மீது (கை) வைத்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் எனக்காக துஆ செய்கின்றார்கள் என்பதை தான் புரிந்து கொண்டதாக ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) படையை நோக்கி திரும்பிச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) திங்கட்கிழமையன்று மீண்டும் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்தார்கள். அப்போது அன்னார் (ஸல்) அவர்களுக்கு சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம், அல்லாஹ்வின் அருளால் புறப்பட்டுச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து விடைபெற்று தமது படையை நோக்கி புறப்பட்டார்கள். பின்னர் புறப்படும்படி மக்களுக்கு கட்டளை வழங்கினார்கள். தற்போது அன்னார் (ரலி) புறப்படுவதற்கு எண்ணம் தான் கொண்டிருந்தார்கள். அதற்குள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி நேரமாக தெரிய வருகின்றது என்று அன்னாரின் தாயாரான ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) சார்பாக ஒரு நபர் தூதுச் செய்தியை கொண்டு வந்தார். அப்போது ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களும் அன்னாருடன் இருந்தார்கள். அது அன்னார் (ஸல்) அவர்களின் இறுதி நேரமாக இருந்தது. ரபீவுல் அவ்வல் 12 ஆம் தேதி திங்கட்கிழமை சூரியன் மறைந்த பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் மரணமடைந்தார்கள். அதன் காரணமாக முஸ்லிம்களின் படை ஜுர்ஃப் என்ற இடத்திலிருந்து மதீனாவிற்கு திரும்பி வந்து விட்டது. ஹஸ்ரத் புரைதா பின் ஹுஸைத் (ரலி), ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் கொடியை ஏந்திக் கொண்டு வந்தார்கள். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வீட்டு வாசலுக்கு முன்னால் அதனை நிலைநிறுத்தி விட்டார்கள்.

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படை ஸீஹுஷ்ப் என்ற இடத்தில் இருந்தது. அப்போது தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தது. இந்த ஸீஹுஷ்ப் என்ற இடம் மதீனாவிலிருந்து சிரியாவிற்கு செல்லும் வழியில் அமைந்துள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயராகும்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் புரைதா பின் ஹுஸைப் (ரலி) அவர்களிடம், கொடியை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் வீட்டிற்கு செல்லும்படியும், அவர் தமது நோக்கத்திற்காக புறப்படும்படியும் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் புரைதா (ரலி) அவர்கள் கொடியை படையின் முந்தைய இடத்திற்கு கொண்டு வந்து வைத்து விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 146, 147 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்தப் படையின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது என்று கூறப்படுகின்றது.

(ஷரஹ் ஸர்கானீ அலல் மவாஹிப் லித்துன்யா தொகுதி 4 பக்கம் 155 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் 700 நபர்களுடன் சிரியாவை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்று வந்துள்ளது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகின்றது. அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு இரண்டாவது நாளன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிப்பு செய்தார்கள். அதாவது உஸாமாவின் திட்டம் முழுமையடைந்து விடும். உஸாமாவின் படையைச் சார்ந்த எந்தவொரு நபரும் மதீனாவில் எஞ்சியிருக்கக் கூடாது. ஆயினும் அவர்கள் அனைவரும் ஜுர்ஃப் என்ற இடத்தில் அந்தப் படையுடன் சென்று இணைந்து கொள்ளட்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அனைத்து அரபு கோத்திரங்களிலும் அது சாதாரணமான கோத்தரமாக இருந்தாலும் சரி; அல்லது சிறப்பான கோத்திரமாக இருந்தாலும் சரி. ஏறக்குறைய ஒவ்வொரு கோத்திரத்திலும் முர்தத்களின் குழப்பம் பரவி இருந்தது. அவர்களின் நயவஞ்சகம் வெளிப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் யூதர்களும், கிறிஸ்தவர்களும் தங்களது கழுத்துகளை உயர்த்தி பார்க்கத் தொடங்கி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம், முஸ்லிம்களின் குறைவான எண்ணிக்கை மற்றும் எதிரிகளின் பெரும்பான்மை போன்ற காரணங்களால் அவர்களின் நிலை மழை பொழியும் இரவில் நிற்கும் ஆடுகளின் நிலையைப் போன்று ஆகி விட்டது. அதாவது முற்றிலும் ஆதரவற்றவர்களாக முஸ்லிம்கள் ஆகி விட்டனர்.

அப்போது மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினர்: இந்த மக்கள் உஸாமாவின் படையை மட்டுமே முஸ்லிம்களின் படையாக கருதுகின்றனர். தாங்கள் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று அரேபியர்கள் தங்களுக்கெதிராக கிளர்ச்சி செய்யத் தொடங்கி விட்டனர். எனவே முஸ்லிம்களின் இந்த கூட்டத்தை உங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளாதீர்கள். அதாவது உஸாமா (ரலி) அவர்களின் படையை அனுப்பாதீர்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது உயிர் எந்த இறைவனின் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! விலங்குகள் என்னை குதறி தின்று விடும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டாலும் கூட நான் உஸாமாவின் படை தொடர்பாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பிறப்பித்த கட்டளையை அமல்படுத்தியே தீருவேன்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எந்த இணையுமற்ற அந்த இறைவனின் மீது ஆணையாக! இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தூய இணையர்களின் கால்களை நாய்கள் இழுத்துக் கொண்டு சென்றாலும் சரியே! நான் அப்போதும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எந்தப் படையை அனுப்பினார்களோ அதனை திரும்ப அழைக்க மாட்டேன். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கட்டிய அந்த கொடியை நான் திறக்க மாட்டேன்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 244 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணித்து விட்டபோது முழு அரபு தேசமும் முர்தத் ஆகி விட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி) போன்ற வீரமான மனிதர்களும் அந்த குழப்பத்தைக் கண்டு பதற்றமடைந்து விட்டனர். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது மரணத்திற்கு முன்பு ரோமானிய பகுதியின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக படை ஒன்றை ஆயத்தம் செய்திருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை அதன் அதிகாரியாக நியமித்திருந்தார்கள். அந்தப் படை தற்போது புறப்பட்டு சென்றிருக்கவில்லை. அதற்குள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது அரபு கோத்திரங்கள் முர்ததாகி இருந்தன. எனவே இதுபோன்ற கிளர்ச்சியான நேரத்தில் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையை ரோமானிய பகுதிகளின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக அனுப்பி வைத்து விட்டால் பின்னர் மதீனாவில் முதியவர்களும், குழந்தைகளும், பெண்களும் மட்டுமே எஞ்சியிருப்பார்கள். மேலும் மதீனாவின் பாதுகாப்பிற்கு எந்த ஏற்பாடும் இருக்காது என்று அவர்கள் எண்ணினர்.

எனவே சஹாபிகளின் ஒரு குழு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சமூகத்திற்கு சென்று இந்தப் படையை கிளர்ச்சியை அடக்கும் வரை நிறுத்தி வைக்கும்படி ஆலோசனை வழங்க எண்ணம் கொண்டது. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஏனைய பெரும் பெரும் சஹாபிகள் அன்னார் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும் இந்த விண்ணப்பத்தை அன்னார் (ரலி) அவர்களின் முன் அவர்கள் வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை செவியுற்றபோது அன்னார் (ரலி) மிகவும் கோபத்துடன் அந்த குழுவிற்கு இந்த பதிலை நல்கினார்கள்: அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அபூகுஹாஃபாவின் மகன் முதன் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தப் படையை அனுப்பி வைப்பதற்கு கட்டளை வழங்கி இருந்தார்களோ அதை நிறுத்தி வைக்க வேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்களா?

என்று கேட்டார்கள். பின்னர் அன்னார் (ரலி) கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! எதிரியின் படைகள் மதீனாவிற்குள் நுழைந்து விட்டாலும், முஸ்லிம் பெண்மணிகளின் பிணங்களை நாய்கள் இழுத்துச் சென்றாலும் அப்போதும் கூட எந்தப் படையை அனுப்பி வைப்பதற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முடிவெடுத்திருந்தார்களோ அந்தப் படையை நான் தடுத்து நிறுத்த மாட்டேன்.

இந்த துணிவும், தைரியமும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இந்த காரணத்தினாலேயே உருவானது. அதாவது இறைவன் இவ்வாறு கூறினான்:

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ وَالَّذِيْنَ مَعَهٗۤ اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ

பொருள்: முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதராவார். அவருடனிருப்பவர்கள் நிராகரிப்பவர்களுக்கெதிரில் கடினமானவர்கள்.

எவ்வாறு மின்சாரத்துடன் ஒரு சாதாரண கம்பி இணைந்து விட்டாலும் அதில் மாபெரும் ஆற்றல் உருவாகி விடுகின்றதோ அதேபோன்று இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுடனான தொடர்பின் விளைவால் அன்னார் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களும், اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ (நிராகரிப்பவர்களுக்கெதிரில் கடினமானவர்கள்) என்பதை உண்மைப்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

(ஸேரே ரூஹானீ (6), அன்வாருல் உலூம் தொகுதி 22 பக்கம் 593, 594)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையின் புறப்பாடு குறித்து சிர்ருல் குலஃபா என்ற தமது நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இப்னு அஸீர் தமது வரலாற்று நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அன்னாரின் மரணச் செய்தி மக்கா மற்றும் அங்குள்ள ஆளுநர் அதாப் பின் அஸீது ஆகியோருக்கு கிடைத்து. அப்போது அதாப் ஒளிந்து கொண்டார். மக்கா அதிர்ந்து போனது. அதன் குடிமக்கள் முர்ததாகுவது சாத்தியமானதாக இருந்தது. முழு அரபு தேசமும் முர்ததாகி விட்டது என்று அவர் தொடர்ந்து எழுதியுள்ளார்.

அனைத்து கோத்திரங்களும் முர்தத் ஆகி விட்டன. நயவஞ்சகம் வெளிப்பட்டு விட்டது. யூதர்களும், கிறிஸ்தவர்களும் தங்களது கழுத்துக்களை உயர்த்திக் கொண்டு பார்க்கத் தொடங்கினர். தமது நபியின் மரணத்தின் காரணமாகவும், தமது எண்ணிக்கை குறைவின் காரணமாகவும் எதிரிகளின் எண்ணிக்கையின் மிகுதியின் காரணமாகவும் முஸ்லிம்களின் நிலை எப்படி ஆகிவிட்டதென்றால், மழை பெய்யும் இரவில் நிற்கும் ஆடுகளின் நிலையைப் போன்று ஆகி விட்டது. அப்போது மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: இந்த மக்கள் உஸாமாவின் படையை மட்டுமே முஸ்லிம்களின் படையாக கருதுகின்றனர். நீங்கள் பார்ப்பதுபோன்று அரபுவாசிகள் தங்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்து விட்டார்கள். எனவே முஸ்லிம்களின் இந்த கூட்டத்தை உங்களிடமிருந்து பிரித்து விடுவது உகந்ததல்ல.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எந்த இறைவனின் கட்டுப்பாட்டில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! விலங்குகள் என்னை தூக்கிக் கொண்டு சென்று விடும் என்ற உறுதி எனக்கு இருந்தாலும் கூட அந்நிலையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையை நான் கண்டிப்பாக அனுப்பி வைப்பேன். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எடுத்த முடிவை என்னால் ரத்து செய்ய முடியாது.

(உருது மொழியாக்கம் சிர்ருல் கிலாஃபா பக்கம் 188, 189 – அடிக்குறிப்பு, ரப்பாவிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

சுருக்கமாக, அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையை முழுமையாக நிலைநாட்டினார்கள். மேலும் அதனை அமல்படுத்தினார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையில் இணைந்திருந்த சஹாபிகளை மீண்டும் படையில் இணையும்படி கட்டளை வழங்கினார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையில் முன்னர் இணைந்திருந்த ஒவ்வொரு நபரும் மேலும் எவரை அந்தப் படையில் இணையும்படி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கட்டளை வழங்கி இருந்தார்களோ அவர்கள் அனைவரும் ஒருபோதும் அந்தப் படையிலிருந்து பின்தங்கி இருக்கக் கூடாது. மேலும் பின்தங்கி இருப்பதற்கு நானும் அனுமதி வழங்க மாட்டேன். அவருக்கு நடந்தே பயணம் செய்ய நேரிட்டாலும் அவர் நிச்சயம் அவருடன் செல்வார். எனவே ஒருவர் கூட அந்தப் படையிலிருந்து பின்தங்க கூடாது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கூறினார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ அலல் மவாஹிப் லித்துன்யா தொகுதி 4 பக்கம் 155 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் மீண்டும் ஒரு முறை படை தயாரானது. சில சஹாபிகள் அபாயகரமான சூழலை கருத்தில் கொண்டு தற்போது இந்தப் படையை நிறுத்தி வையுங்கள் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: தாங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று அன்னாரிடம் இவ்வாறு கூறுங்கள்: அதாவது அன்னார் (ரலி) இந்தப் படையின் புறப்பாடு தொடர்பான கட்டளையை ரத்து செய்யட்டும். அப்போது தான் நாம் முர்தத்களுக்கு எதிராக போர் புரிய முடியும். மேலும் இறைத்தூதரின் கலீஃபாவையும், தூதரின் புனிதங்களையும், முஸ்லிம்களையும் இணை வைப்பவர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக வைக்க முடியும்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையில் பங்கு பெற்றிருந்த சில அன்ஸார் சகோதரர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இவ்வாறும் கூறினார்கள்: அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபாவாகிய ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படையை அனுப்பி வைப்பதில் பிடிவாதமாக இருக்கின்றார்கள் என்றால் பின்னர் எங்கள் சார்பாக அன்னாருக்கு இந்த தூதுச் செய்தியை எட்ட வையுங்கள். மேலும் இந்த விண்ணபத்தை முன் வையுங்கள். அதாவது உஸாமாவை விட வயதில் பெரியவராக இருக்கும் வேறு யாரையாவது படையின் தலைவராக நியமிக்க வேண்டும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டதால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் கூறியவற்றை அன்னாரிடம் எடுத்துரைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நாய்களும், நரிகளும் என்னை கடித்து குதறி தின்றாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய கட்டளையை அப்படியே அமல்படுத்துவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய தீர்ப்பில் எந்த மாற்றத்தையும் நான் செய்ய மாட்டேன். மேலும் இந்த நகரங்களில் என்னைத் தவிர வேறு எவரும் எஞ்சியிருக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டாலும் நான் அந்தத் தீர்ப்பை அமல்படுத்தியே தீருவேன்.

பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை விட வயதில் மூத்த ஒருவரை அமீராக நியமிக்க வேண்டுமென்று அன்ஸார் சகோதரர்கள் விரும்புகின்றனர் என்று கூறினார்கள். அப்போது அமர்ந்திருந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தாடியை பிடித்தார்கள். பின்னர் இப்னு கத்தாபே! உமது தாய் உம்மை இழக்கட்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அவரை அமீராக நியமித்துள்ளார்கள். அவ்வாறிருக்க அவரை அமாரத்திலிருந்து (தலைமைப் பொறுப்பிலிருந்து) அகற்றி விடும்படி நீங்கள் என்னிடம் கூறுகின்றீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 199, 200 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களிடம் திரும்பி வந்தார்கள். அப்போது என்ன ஆயிற்று? என்று அன்னார் (ரலி) அவர்கள் மக்கள் கேட்டனர். அப்போது இங்கிருந்து போய் விடுங்கள். உங்களது தாய்மார்கள் உங்களை இழக்கட்டுமாக என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் கூறினார்கள். மேலும் இன்று உங்களின் காரணமாக இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபாவிடமிருந்து எனக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று கூறி தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள்.

(அஸீரத்துன் ஹலபியா தொகுதி 3 பக்கம் 293 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனது கூற்றுகளை விரும்பவில்லை.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படை ஜுர்ஃப் என்ற இடத்தில் ஒன்றுகூடிவிட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு சுயமே நேரில் சென்றார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அங்கு சென்று படையை ஆய்வு செய்து அதனை ஒழுங்குபடுத்தினார்கள். புறப்படும் நேரத்தின் காட்சி மிகவும் ஆச்சரியத்திற்குரியதாக இருந்தது. அந்த நேரத்தில் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் கால்நடை மீது சவாரி செய்திருந்தார்கள். அதே நேரம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நடை பயணமாக சென்று கொண்டிருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! ஒன்று நீங்கள் கால்நடையின் மீது சவாரி செய்து கொள்ளுங்கள். அல்லது நான் கீழே

இறங்கி விடுகின்றேன் என்று ஹஸ்ரத் உஸாமா (ரலி) கூறினார்கள். அப்போது இறைவன் மீது ஆணையாக! நீங்களும் கீழே இறங்கக் கூடாது. நானும் கால்நடையின் மீது சவாரி செய்ய மாட்டேன். அல்லாஹ்வின் வழியில் சிறிது நேரத்திற்காக எனது கால்கள் தூசியாகி விட்டால் அதனால் எனக்கு என்னவாகிவிடப் போகிறது. ஏனென்றால் போரில் பங்கு பெறக் கூடியவர் ஓர் அடியை எடுத்து வைக்கும்போது அதற்கு பகரமாக 700 நன்மைகளை அவரது கணக்கில் இறைவன் எழுதி விடுகின்றான். அவருக்கு 700 மடங்கு அந்தஸ்து உயர்த்தப்படுகிறது. மேலும் அவரது 700 தீமைகள் அழிக்கப்படுகின்றன என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கூறினார்கள்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 200 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: தாங்கள் உகந்ததாக கருதினால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை எனது பணிகளில் உதவி செய்வதற்காக விட்டு விடுங்கள். அதற்கு ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள், அனுமதி நல்கினார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 246 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை எப்போது சந்தித்தாலும் எந்த அளவுக்கென்றால், கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் கூட அன்னாரை சந்திக்கும்போது اَلسَّلَامُ عَلَيْكَ أَيُّهَا الْأَمِيْرُ என்று கூறியவாறே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பேச்சை தொடங்குவார்கள். ஏனென்றால், அன்னார் அவர்கள் அந்த குழுவில் பங்கு பெற்றிருந்தார்கள். எனவே அப்போது அன்னாரின் அமீராக அவர் இருந்தார். அமீரே! அஸ்ஸலாமு அலைக்கும் என்ற ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

அதற்கு غَفَرَ اللهُ لَكَ يَا أَمِيْرَ الْمُؤْمِنِيْنَ என்று கூறி ஹஸ்ரத் உஸாமா (ரலி) பதிலளித்து வந்தார்கள்.

பொருள்: அமீருல் மூமினீன் அவர்களே! அல்லாஹ் தங்களுடன் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக.

(அஸீரத்துன் ஹலபியா தொகுதி 3 பக்கம் 294 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இன்னும் குறிப்பு தொடர்கின்றது. எல்லாவற்றிற்கும் இறுதியில் படையை நோக்கி உரையாற்றியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் உங்களுக்கு பத்து விஷயங்களுக்கு அறிவுரை செய்கின்றேன். நீங்கள் நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள். போர் செல்வங்களை திருடாதீர்கள். நீங்கள் உடன்படிக்கையை மீறாதீர்கள். மஸ்லா எனும் போர் வீரரின் உடலை சிதைக்காதீர்கள். ஒருவருடைய மூக்கு, காதுகளை வெட்டுவதும், கண்களை தோண்டுவதும், முகங்களை சிதைப்பதும் கூடாது. எந்தவொரு குழந்தையையும் கொலை செய்யக் கூடாது. வயது முதிர்ந்தவரையும், அதேபோன்று பெண்களையும் கொலை செய்யக் கூடாது. பேரீத்தம் பழ மரங்களை வெட்டக் கூடாது. மேலும் அதனை எரிக்கக் கூடாது. மேலும் கனி தரும் எந்தவொரு மரத்தையும் வெட்டக் கூடாது. உணவிற்காக தவிர்த்து வேறு எதற்காகவும் எந்தவொரு ஆட்டையும், ஒட்டகத்தையும் அறுக்கக் கூடாது. தங்களை தேவாலயங்களுக்காக அர்ப்பணித்துக் கொண்ட சில மக்களை நீங்கள் கடந்து செல்வீர்கள். எனவே நீங்கள் அவர்களை அந்த நிலையில் விட்டு விடுங்கள். அதாவது துறவிகள், கிறிஸ்தவ பாதிரிமார்கள் போன்றவர்களை விட்டு விடுங்கள். அவர்கள் எத்தனை நபர்களாக இருந்தாலும் அவர்களை ஒன்றும் கூற வேண்டாம்.

மேலும் பல்வேறு வகையான உணவுகளை பாத்திரங்களில் முன் வைக்கும் மக்களிடம் நீங்கள் செல்வீர்கள். நீங்கள் அல்லாஹ்வின் பெயரை கூறி அதனை உண்ணுங்கள். இது ஹராமாகும் என்று அவர்கள் உணவை கொடுக்கும்போது உண்ணாமல் இருக்க வேண்டாம். பிஸ்மில்லாஹ் கூறி உண்டு கொள்ளுங்கள். மேலும் தமது தலை முடிக்கு மத்தியிலிருந்து சுத்தம் செய்து நாலா புறமும் கீற்றுகளைப் போன்று முடியை விட்டு வைத்திருக்கும் மக்களையும் நீங்கள் சந்திப்பீர்கள். அவர்களை வாள் கொண்டு எதிர்கொள்ளவும்.

இந்த மக்களைக் குறித்து பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. இவ்வாறு வருகின்றது. அதாவது கிறிஸ்தவர்களின் ஒரு கூட்டம் இருந்தது. அவர்கள் துறவிகளாக இருக்கவில்லையென்றாலும் மார்க்க தலைவர்களாக இருந்தனர். அவர்கள் முஸ்லிம்களுக்கெதிராக போர் செய்வதற்கு மக்களை தூண்டிக் கொண்டிருந்தார்கள். போரில் பங்கு பெற்றிருந்தார்கள்.

எனவே அன்னார் (ரலி) இவ்வாறு கூறி இருந்தார்கள். அதாவது துறவிகளாக, தேவாலயங்களுக்குள் இருப்பவர்களை ஒன்றும் கூற வேண்டாம். அவர்களுடன் போர் செய்ய வேண்டாம். ஆனால் அதுபோன்ற எதிர்க்கும் மக்களுடனும் அவர்களை பின்பற்றி செல்லக் கூடிய மக்களுடனும் போரிட வேண்டும். ஏனென்றால் இந்த மக்கள் போர் புரியக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள். போர் செய்ய தூண்டுபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் பெயரைக் கூறி புறப்பட்டு விடுங்கள் என்று கூறினார்கள். அல்லாஹ் உங்களை எல்லா வகையான காயங்களிலிருந்தும், நோய்களிலிருந்தும், பிளேக்கிலிருந்தும் பாதுகாப்பானாக. (தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 246 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உங்களுக்கு வழங்கிய அனைத்து கட்டளைகளின்படியும் செயல்படுங்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கட்டளையை செயல்படுத்துவதில் எந்த வகையிலும் கவனக்குறைவாக இருக்காதீர்கள் என்றும் கூறினார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 246 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்துக் கொண்டு மதீனாவிற்கு சென்று விட்டார்கள். (சீரத் ஸய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல், பக்கம் 561)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டின் இறுதியில் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களின் படையை அனுப்பி வைத்தார்கள்.

(அல்பதாயா வந்நஹாயா தொகுதி 3 பக்கம் 302 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு ரபீயுஸ் ஸானி மாதம் 1 ஆம் தேதி அந்தப் படையை அனுப்பி வைத்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 147 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் 20 இரவுகள் பயணம் செய்து உப்னாவாசிகளை சென்றடைந்தார்கள். மேலும் திடீரென அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தார்கள். அது தொடர்பான முஸ்லிம்களின் கவிதைகள் இவ்வாறு உள்ளன.

يَا مَنْصُوْرُ أَمِتْ

பொருள்: மன்ஸூரே! கொல்வீராக. அதாவது போரிடுவதற்கு எவரெல்லாம் முன்னால் வருவாரோ அவரை கொல்வீராக. எவர் முன்னால் வந்தாரோ அவரை கொன்று விட்டனர். எவர் மீது ஆதிக்கம் பெற்றனரோ அவரை கைதியாக்கி விட்டனர். அவர்களின் மைதானங்களில் தமது குதிரை சவாரிகளை நிறுத்தினார்கள். அந்த நாளில் போர் செல்வங்களாக கிடைத்தவற்றை பாதுகாப்பதில் மும்முரமாக இருந்தார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் தமது தந்தையின் சப்ஹா என்ற பெயர் கொண்ட குதிரையின் மீது சவாரி செய்திருந்தார்கள். அன்னார் தனது தந்தையை கொலை செய்தவர் மீது தாக்குதல் தொடுத்து அவரையும் கொன்று விட்டார்கள். மாலை நேரமானதும் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் மக்களுக்கு புறப்படும்படி கட்டளையிட்டார்கள். மேலும் தமது வேகத்தை அதிகரித்து விட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் 9 இரவுகளில் வாதியுல் குரா என்ற இடத்தை அடைந்து விட்டார்கள். மேலும் படையின் பாதுகாப்பின் செய்தியை வழங்கக் கூடிய ஒரு நபரை மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு அன்னார் புறப்படுவதற்கு எண்ணம்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

கொண்டார்கள். 6 இரவுகளில் மதீனா சென்றடைந்தார்கள். இந்தப் போரில் முஸ்லிம்களில் எந்தவொரு நபரும் ஷஹீதாகவில்லை. வெற்றி வாகை சூடிய இந்த படை மதீனாவை வந்தடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் மதீனாவாசிகளுடன் படை பாதுகாப்பாக திரும்பியதில் மகிழ்ச்சியடைந்து அவர்களை சந்திப்பதற்காக வெளியே புறப்பட்டார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் தமது தந்தையின் குதிரையின் மீது சவாரி செய்தவாறு இருந்தார்கள். ஹஸ்ரத் புரைதா பின் ஹுஸைப் (ரலி) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களுக்கு முன்னால் கொடியை தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ரலி) மஸ்ஜிது நபவியை அடைந்தார்கள். அன்னார் (ரலி) பள்ளிவாசலில் நுழைந்து 2 ரக்அத்கள் தொழுதார்கள். பின்னர் அன்னார் (ரலி) தமது வீட்டிற்கு சென்று விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 147 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பல்வேறு அறிவிப்புகளின் அடிப்படையில் 40 நாட்கள் முதல் 70 நாட்கள் வரை வெளியில் இருந்த பிறகு அந்தப் படை மதீனாவிற்கு திரும்பி வந்தடைந்திருந்தது.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 200 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இருந்த அன்பும் அதற்கு காரணியாக இருந்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் கொடியை தமது கரங்களால் கட்டியிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே தமது கரங்களால் கட்டிய அந்த கொடியை திறப்பது இப்னு அபூகுஹாஃபாவிற்கு எவ்வாறு சாத்தியமாகும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே உஸாமா படை திரும்பி வந்தபோது அந்தக் கொடி திறக்கப்படவில்லை. பிறகும் கூட அந்தக் கொடி ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் வீட்டிலேயே இருந்தது. எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். (அல்மஸீரத்துல் இஸ்லாமியா... பக்கம் 34, 35 – 2015 ஆம் ஆண்டு தாருல் இஸ்லாமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையின் தாக்கங்களைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. இந்தப் படையில் மிக மிக முக்கியமான, தொலைதூர தாக்கங்கள் வெளிப்பட்டன. அதில் ஒன்று என்னவென்றால், உஸாமாவின் படையை தற்போது அனுப்பக் கூடாது என்று மிகக் கடுமையாக கூறி வந்த அந்த மக்கள் அனைவரும் கலீஃபாவின் தீர்ப்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், பொருத்தமானது என்பதையும் அறிந்து கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் ஆழமான பார்வையும், புரிதலும், அகப்பார்வை கொண்டவராகவும் இருந்தார்கள் என்பதையும் அறிந்து கொண்டார்கள்.

(2) அந்தப் படை புறப்படுவதற்கு முன்பு அரபு கோத்திரங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்தன. ஆனால் படை அனுப்பப்பட்டதும், ஒருவேளை முஸ்லிம்களிடத்தில் வலிமை இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் இந்தப் படையை அனுப்பி இருக்க மாட்டார்கள் என்று கிளர்ச்சியாளர்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டனர். படையை அனுப்பியது அவர்கள் மீது பெரும் திகிலை ஏற்படுத்தி இருந்தது.

(3) அரபு தேசத்தின் எல்லைகளின் மீது கண் வைத்திருந்த வெளிநாட்டு சக்திகள் மீது குறிப்பாக ரோமானியர்கள் மீது முஸ்லிம்களின் திகில் மேலோங்கியது. எனவே ரோமானியர்கள் இவ்வாறு கூறத் தொடங்கினர். இந்த மக்கள் எப்படிப்பட்ட மக்களாக உள்ளனர். ஒரு பக்கம் அவர்களின் நபி மரணித்துக் கொண்டிருக்கின்றார். அவ்வாறிருந்தும் அவர்கள் நமது நாட்டின் மீது தாக்குதல் தொடுக்கின்றனர்.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 258, 268)

பிரபலமான இங்கிலாந்தின் கல்வியாளர் தாமஸ் வாக்கர் அர்னால்டு உஸாமா படையைப் பற்றி இவ்வாறு எழுதுகின்றார்:

(After the death of Muhammad, the army he had intended for syria was despatched thither by Abu Bakr, in spite of the protestations made by certain Muslims in view of the then disturbed state of Arabia. He silenced thier expostulations with the words: “I will not revoke any order given by the Prophet. Medina may become the prey of wild beasts, but the army must carry out the wishes of Muhammad.” This was the first of that wonderful series of campaigns in which the Arabs owerran syria, Persia and Northern Africa-overturning the ancient kingdom of Persia and despoiling the Roman Empire of some of tis fairest provinces.)

(The Preaching of Islam By T.W. Arnold, Chapther III, Page 41, London constable and Company Ltd, 1913)

அதன் பொருள்: முஹம்மது (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அபூபக்ர் உஸாமா படையை அனுப்பி வைத்தார். சிரியாவை நோக்கி அனுப்பி வைப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறுதி பூண்டிருந்தார்கள். அரபு நாட்டில் பதற்றத்தின் நிலை அதிகரித்திருந்தபோதிலும், சில முஸ்லிம்கள் அதில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தபோதிலும் அபூபக்ர் (ரலி) அதனை மறுத்து தனது இந்த கூற்றால் அவர்களை அமைதிப்படுத்தி விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சார்பாக வழங்கப்பட்ட எந்தவொரு கட்டளையையும் நான் ரத்து செய்ய மாட்டேன். மதீனா காட்டு விலங்குகளுக்கு இரையானாலும் சரியே. அந்நிலையிலும் நான் ஹுஸூர் (ஸல்) அவர்களின் விருப்பங்களை நிச்சயம் முழுமை செய்வேன். சிரியா, ஈரான் மற்றும் வடக்கு ஆஃப்ரிக்கா ஆகிய நாடுகளை அரபுகள் வெற்றி கொண்ட அருமையான திட்டங்களில் இது முதல் திட்டமாக இருந்தது. பழமையான பாரசீக அரசாங்கத்தை அழித்தார்கள். மேலும் ரோமானிய பேரரசின் கீழ் இருந்த பெரும்பாலான மாநிலங்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார்கள்.

அதேபோன்று மற்றோர் இடத்தில் இதைக் குறிப்பிட்டவாறு The Encyclopaedia of Islam எனும் நூலில் ஹஸ்ரத் உஸாமா அவர்களைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

The newly-elected caliÇ Abu Bakr ordered the expedition to be resumed, in accordance with the Prophet’s wihses, though the tribes were already in revolt, Usama reached the region of al-Balka in Syria, where Zahd had fallen, and raided the village of Ubna..... His victory brought joy to Medina, depressed by news of the ridda, thus acquiring an importance out of proportion to its real significance, which caused it later to be regarded as the beginning of a campaign for the conquest of Syria.

(The Encyclopaedia of Islam Vol.10, Page 913, Under Usama Printed by Leiden brill 2000)

பொருள்: புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கலீஃபா அபூபக்ர் இவ்வாறு கட்டளை வழங்கினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விருப்பங்களை முழுமை செய்வதற்காக உஸாமாவின் படை திட்டமிட்டபடி செல்லும். கோத்திரங்கள் ஏற்கனவே கிளர்ச்சி செய்தன. அந்த நிலையிலும் படை செல்லும்.

உஸாமா சிரியா நாட்டில் பல்கா என்ற பகுதியை சென்றடைந்தார். அங்கு தான் ஸைது கொல்லப்பட்டிருந்தார். மேலும் உஸாமா உப்னா என்ற ஊரின் மீது தாக்குதல் தொடுத்தார். அவருக்கு கிடைத்த வெற்றியால் மதீனாவாசிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஏனென்றால் கிளர்ச்சியாளர்களின் செய்தியின் காரணமாக அவர்கள் ஏற்கனவே கவலை அடைந்திருந்தனர். அப்படிப்பட்ட மதீனாவாசிகளிடம் இந்த வெற்றியின் செய்தி மகிழ்ச்சியை வழங்கியது. எனவே இந்த திட்டம் ஒரு பொதுவான திட்டம் என்ற அடிப்படையை விட அதிக முக்கியத்துவத்தை பெற்று விட்டது. அதன் காரணமாக இந்த திட்டம் சிரியா வெற்றிக்கு முன்னோட்டமாக கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மற்றொரு சவாலையும் எதிர்கொள்ள நேரிட்டது. அது என்னவென்றால், மானிஈன் மற்றும் முன்கரீனே ஸகாத் என்ற ஸகாத் கொடுக்க மறுத்தவர்களின் குழப்பமாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணச் செய்தி முழு அரபு தேசத்திலும் பரவியது. அப்போது எல்லா புறமும் கிளர்ச்சியின் ஜுவாலை கொளுந்து விட்டு எரிந்தது.

அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணித்த நேரத்தில் அனைத்து அரபுகளும் முர்ததாகி இருந்தன. மதீனா மற்றும் மக்காவின் இரண்டு பள்ளிவாசல்களைத் தவிர வேறெங்கும் தொழுகை நடைபெறவில்லை.

(அல்பதாயா வந்நஹாயா லி இப்னீ கஸீர் தொகுதி 3 பக்கம் 309 – 2001 ஆம் ஆண்டு

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மக்காவாசிகள் முர்தத் ஆகுவதிலிருந்து பாதுகாப்பாக இருந்தார்கள். அதன் விளக்கம் இவ்வாறு கிடைக்கின்றது. சுஹைல் பின் அம்ர் மக்கா வெற்றியின்போது இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். பத்ர் போரில் நிராகரிப்பாளரான நிலையில் முஸ்லிம்களிடம் கைதியாக ஆனார்கள். அன்னார் தமது உதடுகளில் அடையாளங்களை ஏற்படுத்தி இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அந்த சந்தர்ப்பத்தில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவரது இரண்டு முன் பற்களை பிடுங்கி விடுங்கள். அதாவது எங்கு இவர் அடையாளமிட்டு வைத்துள்ளாரோ அதனை பிடுங்கி விடுங்கள். அந்நிலையில் இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராக சொற்பொழிவாற்ற ஒருபோதும் தயாராக மாட்டார் என்று கூறினார்கள். அப்போது உமரே! நீங்கள் அவரை விட்டு விடுங்கள். நீங்கள் அவரை பாராட்டும் ஒரு அந்தஸ்தில் அவர் நிற்கக் கூடும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க விரும்பினார்கள். ஆனால் அவரை ஒன்றும் கூறாதீர்கள். ஒரு சந்தர்ப்பம் வரும். அவரை நீங்களே பாராட்டுவீர்கள். அப்படிப்பட்ட அந்தஸ்தை அவர் அடைவார். மேலும் நீங்கள் அவரை பாராட்டும் வகையில் அவர் பேசுவார் என்று என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் அவர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது மக்காவாசிகள் தடுமாற்றம் அடைந்தனர். அப்போது அந்த அந்தஸ்து வந்தது. குரைஷிகள், அரபு வாசிகள் மார்க்கத்தை விட்டு விலகுவதை பார்த்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக மக்காவாசிகளுக்கு அமீராக நியமிக்கப்பட்டிருந்த ஹஸ்ரத் அதாப் பின் அஸீத் அமவி (ரலி) அவர்கள் ஒளிந்து கொண்டார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் சுஹைல் பின் அம்ர் சொற்பொழிவாற்றியவாறு எழுந்து நின்றார்கள்.

மேலும் கூறினார்கள்: குரைஷிய கூட்டத்தினரே! இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டு, எல்லாரையும் விட முதலில் மார்க்கத்தை விட்டும் வெளியேறும் மக்களாக ஆகி விடாதீர்கள். இறைவன் மீது ஆணையாக! சூரியனும், சந்திரனும் உதிப்பது முதல் மறையும் வரை பரவுவதைப் போன்று இந்த மார்க்கம் பரவும்.

இவ்வாறு அன்னார் (ரலி) அதாவது சுஹைல் ஒரு நீண்ட உரை நிகழ்த்தினார். எனவே இந்த சொற்பொழிவு மக்காவாசிகளின் உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் அவர்களை தடுத்து நிறுத்தியது. ஹஸ்ரத் அதாப் பின் அஸீத் (ரலி) அவர்கள் மறைந்திருந்தார்கள். அவர்களும் அழைக்கப்பட்டார்கள். குரைஷிகள் இஸ்லாத்தின் மீது உறுதிப்பாட்டுடன் நின்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 585 சுஹைல் பின் அம்ர் – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மார்க்கத்தை விட்டு வெளியேறி இருந்த மக்களின் வகை பலதரப்பட்டதாக இருந்தது. அதனைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடிய ஒருவர் இவ்வாறு எழுதுகின்றார்:

மார்க்கத்தை விட்டு வெளியேறுவதும் பல்வேறு வகைப்பட்டதாகும். சில மக்கள் முழுவதுமாக இஸ்லாத்தை விட்டு விட்டு வஸ்னீதா என்ற சிலை வணக்கத்தை மேற்கொண்டு விட்டனர். சில மக்கள் நபித்துவ வாதம் செய்தனர். சில மக்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தனர். தொழுகையையும் நிலைநாட்டி வந்தனர். ஆனால் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர். சில மக்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்தால் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் அறிவீனமான பழக்கங்களிலும், செயல்களிலும் ஈடுபட்டனர். சில மக்கள் ஆச்சரியத்திற்கும், மறுப்பிற்கும் இரையாகினர். மேலும் யாருக்கு வெற்றி கிடைக்கின்றது என்ற எதிர்பார்ப்பில் இருந்தனர்.

இந்த அனைத்து வகைகளின் விளக்கத்தையும் வாழ்க்கை வரலாறு மற்றும் மார்க்க சட்ட அறிஞர்கள் விரிவாக எடுத்துரைத்துள்ளனர். இமாம் கதாபி கூறுகின்றார்கள்: முர்தத்கள் இரண்டு வகையானவர்களாக இருந்தனர். ஒன்று, மார்க்கத்திலிருந்து முற்றிலும் விலகியவர்கள். மார்க்கத்தை விட்டு நிராகரிப்பின் பக்கம் சென்று விட்டனர். இந்தப் பிரிவில் இரண்டு கூட்டத்தினர் இருந்தனர். ஒரு கூட்டம், முஸைலமா கத்தாப் மற்றும் அஸ்வத் அன்ஸி மீது ஈமான் கொண்ட கூட்டத்தினராக இருந்தனர். அவர்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்தினர். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நபித்துவ வாதத்தை நிராகரித்தனர். இரண்டாவது கூட்டத்தினர் யாராக இருந்தனர் என்றால், அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து விலகி நின்றனர். ஷரீஅத் கட்டளைகளை மறுத்தனர். தொழுகை, ஸகாத் போன்ற கட்டளைகளை கைவிட்டு விட்டு அறிவீனமான மார்க்கத்தின் பக்கம் திரும்பி விட்டனர்.

முர்தத்களின் இரண்டாவது வகை மக்கள், தொழுகை மற்றும் ஸகாத் இரண்டிற்கு மத்தியிலும் வேறுபாட்டை கொண்டிருந்தனர். அதாவது தொழுகையை ஏற்றுக் கொண்டனர். ஸகாத்தின் கடமையையும், அதனை கலீஃபாவிற்கு கொடுப்பதையும் நிராகரித்தனர். அந்த ஸகாத்தை தடுப்பவர்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாகவும் இருந்தனர். அதாவது அவர்களில் சிலர் ஸகாத் கொடுக்க விரும்பினர். ஆனால் அவர்களின் தலைவர்கள் அதிலிருந்து அவர்களை தடுத்து வந்தனர்.

முர்தத்கள் பல்வேறு வகைப்பட்டவர்களாக உள்ளனர். முதல் வகையான பிரிவு, காஸி இயாஸ் அவர்களின் பிரிவாகும். அதாவது அன்னார் மூன்று வகைகளை எடுத்துரைத்துள்ளார்கள். முதல் வகை, சிலை வணக்கத்தை மேற்கொண்டவர்கள். இரண்டாவது வகை, முஸைலமா கத்தாப் மற்றும் அஸ்வது அன்ஸியை பின்பற்றக் கூடியவர்கள். அவர்கள் இருவரும் நபித்துவ வாதத்தை செய்பவர்களாக இருந்தனர். மூன்றாவதாக, இஸ்லாத்தின் மீது நிலைநின்றவர்கள். ஆனால் ஸக்காத் கொடுக்க மறுத்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டம் வரை தான் அது கடமையாக இருந்தது என்ற விளக்கத்திற்கு இரையாகி விட்டார்கள்.

பின்னர் டாக்டர் அப்துர் ரஹ்மான் சாஹிப் என்ற ஒருவர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: முர்தத்கள் நான்கு வகைப்படுவர். முதல் வகை, சிலை வணக்கத்தில் ஈடுபட்டவர்கள். இரண்டாவது வகை மக்கள், அஸ்வது அன்ஸி மற்றும் முஸைலமா கத்தாப், ஷஜாஹ் போன்ற பொய் நபித்துவ வாதிகளை பின்பற்றியவர்கள். மூன்றாவது வகையினர், ஸகாத் காரணிகளை நிராகரித்த மக்கள். நான்காவது வகை, ஸகாத் காரணிகளை மறுக்கவில்லையென்றாலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஸக்காத் கொடுப்பதை மறுத்தவர்கள்.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 272, 273)

ஸகாத் கொடுக்க மறுத்த கோத்திரங்களில் மிகவும் முக்கியமான கோத்திரம் மதீனாவிற்கு அருகில் இருந்த கோத்திரமான அபஸ், துப்யான் மற்றும் அவர்களுடன் இணைந்திருந்த கோத்திரங்களான பனூ கினானா, கத்ஃபான் மற்றும் ஃபஸாரா போன்ற கோத்திரங்கள் ஆகும்.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 101)

ஹவாஸின் கோத்திரமும் முர்ததாக இருந்தது. அவர்களும் ஸகாத் கொடுப்பதற்கு மறுத்திருந்தார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 254 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஸகாத் கொடுக்க மறுப்பவர்கள் தொடர்பாக சஹாபிகளிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் செய்த ஆலோசனை குறித்தும் குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பெரும் சஹாபிகளை ஒன்றுகூட்டி அவர்களிடம் ஸகாத் கொடுக்க மறுப்பவர்களுடன் போர் புரிவது தொடர்பாக ஆலோசனை செய்தார்கள். தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொண்டு ஸகாத் கொடுக்க அவர்கள் மறுத்திருந்தனர். அல்லாஹ் மற்றும் அவனது தூதர் மீது நம்பிக்கை கொள்ளக் கூடிய மக்களுடன் நாம் ஒருபோதும் போரிடக் கூடாது. மாறாக, அவர்களை நம்முடன் இணைத்துக் கொண்டு முர்தத்களுக்கு எதிராக தீவிரமாக செயல்பட வேண்டும் என்பது ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) மற்றும் பெரும்பாலான முஸ்லிம்களின் கருத்தாக இருந்தது. சில மக்கள் இந்த கருத்துக்கு எதிராக இருந்தனர். ஆயினும் அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 135 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் சஹாபிகள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இந்த ஆலோசனையை வழங்கினர். அதாவது ஸகாத் கொடுக்க மறுப்பவர்களை அவர்களின் நிலையில் விட்டு விடுங்கள். அவர்களின் உள்ளங்களை ஈர்க்க வேண்டும். எந்த அளவுக்கென்றால் அவர்களின் உள்ளங்களில் ஈமான் உறுதி பெற்று விட வேண்டும். அதன் பிறகு அவர்களிடமிருந்து ஸகாத் வசூல் செய்யப்பட வேண்டும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதை ஏற்கவில்லை. அதனை நிராகரித்து விட்டார்கள்.

(அல்பதாயா வந்நஹாயா தொகுதி 3 பக்கம் 308 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸகாத் கொடுக்க மறுப்பவர்களுடன் போரிட்டு ஸகாத் வழங்குவதற்கு அவர்களை நிர்ப்பந்திக்க வேண்டும் என்ற கருத்தில் நிலைபெற்றிருந்தார்கள். இந்த விவகாரத்தில் அவர்கள் எந்த அளவிற்கு தீவிரமாக இருந்தார்கள் என்றால் விவாதித்துக் கொண்டிருக்கும்போது அழுத்தம் நிறைந்த சொற்களில் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஸகாத்தாக கொடுத்து வந்த கயிறை எனக்கு ஸகாத்தாக கொடுப்பதற்கு நிராகரித்து விட்டாலும் நான் அவர்களுடன் போரிடுவேன்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 135, 136 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

புகாரியின் ஓர் அறிவிப்பில் இந்த விஷயம் இவ்வாறு விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

أُمِرْتُ أَنْ أُقَاتِلَ النَّاسَ حَتّٰى

يَقُوْلُوْا لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ فَمَنْ قَالَهَا فَقَدْ عَصَمَ مِنِّيْ

مَالَهٗ وَنَفْسَهٗ إِلَّا بِحَقِّهٖ وَحِسَابُهٗ عَلَى اللّٰهِ

என்று கூறியிருக்கும்போது மக்களுடன் நீங்கள் எவ்வாறு போரிடுவீர்கள். மக்கள் லாயிலாஹா இல்லல்லாஹ் என்று ஒப்புக் கொள்ளும் வரை நான் மக்களுடன் போரிட வேண்டும் என்று எனக்கு கட்டளை வழங்கியுள்ளார்கள். எவர் ஒப்புக் கொண்டு விடுவாரோ அவர் என்னிடமிருந்து தனது செல்வத்தையும், உயிரையும் பாதுகாத்துக் கொண்டார். ஏதாவதொரு உண்மையின் அடிப்படையில் விலகியவரைத் தவிர. அவரது கணக்கு அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! நான் நிச்சயம் போரிடுவேன். எவர் தொழுகை மற்றும் ஸகாத்திற்கிடையில் வேறுபாடு காட்டினாரோ அவருடன் போரிடுவேன். ஏனென்றால் ஸகாத் செல்வத்தின் உரிமை ஆகும். இறைவன் மீது ஆணையாக! அவர்கள் ஆட்டுக் குட்டியை எனக்கு (ஸகாத்தாக) கொடுக்காவிட்டாலும் கூட அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு வழங்கி வந்ததை எனக்கு கொடுக்காவிட்டால் அதனை தடுத்து நிறுத்தியதற்காக அவர்களுடன் நான் போரிடுவேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்வாறு நடக்கக் கூடாது. அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளத்தை திறந்திருந்தான். அதுவே உண்மை என்பதை நான் புரிந்து கொண்டேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸக்காத்... ஹதீஸ் எண் 1399, 1400)

அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சரியாக கூறிக் கொண்டிருந்தார்கள் என்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு பிற்காலத்தில் ஒப்புக் கொள்ள நேரிட்டது.

ஹஸ்ரத் செய்யது ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் عَصَمَ مِنِّيْ مَالَهٗ وَنَفْسَهٗ إِلَّا بِحَقِّهٖ என்ற ஹதீஸிற்கு விளக்கம் அளித்தவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

إِلَّا بِحَقِّ الْإِسْلَامِ என்ற வாக்கியம் கட்டுரையின் மையக் கருத்தின் மீது அதிக ஒளி பாய்ச்சுகின்றது. ஒரு முஸ்லிம் நபர் لا اله الا الله என்பதை ஒப்புக் கொண்டு விட்டு அவர் இஸ்லாமிய கடமைகளை மேற்கொள்ளவில்லையென்றால் பின்னர் அவர் விசாரிக்கப்படுவார். வெறும் ஈமான் கொண்டு அவர் தண்டனையிலிருந்து தப்பித்து விட முடியாது.

بِحَقِّ الْإِسْلَامِ என்பதற்கு இரண்டு வகையில் பொருள் கொடுக்க முடியும். ஒன்று என்னவென்றால், எங்கு இஸ்லாமிய உரிமைகளுக்கான தொடர்பு இருக்குமோ அங்கு மஸ்தராக ஹக் என்ற சொல் இருக்கும். அது பண்மையின் பொருளையும் தருகிறது. இரண்டாவது பொருள் என்னவென்றால், எந்த இடங்களில் இஸ்லாம் செல்வங்களையும், உயிர்களையும் பறிப்பதை அவசியமாக்கி உள்ளதோ அங்கு அது பொருந்தும். حَقَّ الْأَمْرَ: أَثْبَتَهُ وَأَوْجَبَهُ அதனை அவசியமாக்கியுள்ளது. இது முதஅத்தி என்ற இலக்கண பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றது.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் ஈமான் தொகுதி 1 பக்கம் 65)

சமுதாய உறுப்பினர்களின் பாதுகாப்பின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றுவதுடன் அது இணைந்துள்ளது. எவ்வாறு வரி செலுத்தாமல் இருப்பது கிளர்ச்சியாகவும், தண்டனைக்கு காரணியாகவும் அமைகின்றதோ அதேபோன்று ஸகாத் கொடுக்காமல் இருப்பதும் அமைகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் உடன்படவில்லை. ஆனால்

إِلَّا بِحَقِّهٖ என்ற சொல்லிலிருந்து அன்னாரின் சொல்லை செவிமடுத்தபோது அன்னாரின் கருத்தை ஒப்புக் கொண்டார்கள். இந்த சம்பவத்திலிருந்து வெறும் நாவினால் لا اله الا الله என்று கூறி விட்டு, நற்செயல்கள் மேற்கொள்ளாமல் இருக்கும் நிலையும் உறுதியாக எந்த உண்மைத்துவமும் கொண்டிருப்பதில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. இந்தப் பாடத்தின் தலைப்பு இந்த வசனத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

فَإِنْ تَابُوْا وَأَقَامُوا الصَّلٰوةَ وَآتَوُا الزَّكٰوةَ فَخَلُّوْا سَبِيْلَهُمْ

இந்த அதிகாரத்தில் மேற்கூறப்பட்ட கட்டுரையை எடுத்துரைத்தவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

فَإِنْ تَابُوْا وَأَقَامُوا الصَّلٰوةَ وَآتَوُا الزَّكٰوةَ

فَإِخْوَانُكُمْ فِي الدِّيْنِ

தவ்பா செய்து விட்டால், தொழுகையை நிலைநாட்டி ஸகாத்து கொடுத்து விட்டால் பின்னர் மார்க்கத்தில் அவர்கள் உங்களுடைய சகோதரர்கள் ஆவர். அவர்களுடன் போரிட வேண்டாம்.

இந்த சொற்களிலிருந்து இந்த விஷயம் நிரூபணமாகின்றது. அதாவது இந்த மூன்று விஷயங்களில் ஏதாவதொன்றை விட்டு விடுபவர் முஸ்லிம் அல்ல. இஸ்லாத்தின் ஐந்து கட்டளைகளை பின்பற்றுவது கடமையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே إِلَّا بِحَقِّهٖ என்று கூறி இறை வழியில் செலவு செய்வதை சமூகத்தின் பலவீனமான அங்கத்தினரின் உரிமையாக குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது செல்வ வசதி படைத்தவர்கள் இஸ்லாமிய கட்டளைகளை பேணுவதும், பொருளாதார கடமைகளை செலுத்துவதும் அவர்கள் மீது கடமையாகும். இந்த நிலையில் அவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும்.

إِلَّا بِحَقِّهٖ என்ற சொல்லிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆழமான மற்றும் பரந்த பார்வைக்கான சான்று கிடைக்கின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பொருத்தவரை ஸகாத் கொடுக்காமல் இருப்பது கிளர்ச்சி ஆகும். ஸகாத் கொடுக்காமல் இருப்பவர் இஸ்லாமிய சமூகத்தின் உறுப்பினராக இருக்க முடியாது. அவரது இந்த கிளர்ச்சியின் காரணமாக அவருடன் போரிடுவது அவசியமாகும். இஸ்லாம் நிச்சயமாக لَا إِكْرَاهَ فِي الدِّيْنِ (மார்க்கத்தில் பலவந்தம் இல்லை) என்று கூறியுள்ளது. இந்த வழிகாட்டல் மூலமாக மார்க்கம் தொடர்பான சுதந்திரத்தை வழங்கியுள்ளது. ஆனால் எந்த நபர் வெளிப்படையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்கின்றாரோ, இஸ்லாமிய சமூகத்தில் இணைந்து அதன் பாதுகாப்பில் உள்ளாரோ, மேலும் அதன் பரக்கத்துகளிலிருந்து பயன் பெற்று தமது கூட்டு உரிமைகளில் முழுமையாக பயன் பெற்று வருகின்றாரோ அதே சமயம் இஸ்லாமிய சமூகத்தின் உறுப்பினர் என்ற முறையில் இஸ்லாம் அவர் மீது சுமத்தியுள்ள கடமைகளையும், உரிமைகளையும் அவர் செலுத்தவில்லையென்றால் அப்படிப்பட்ட நபர் ஒன்றுபட்ட பாதுகாப்பு மற்றும் அடைக்கலத்திற்கு உரிமை பெற்றிருக்கவில்லை. உலகில் எந்தவொரு அரசாங்கமும் சட்டத்தை மீறுபவர்களையும், கிளர்ச்சி செய்பவர்களையும் சகித்துக் கொள்வதில்லை. இஸ்லாமிய அமைப்பின் ஸகாத் மற்றும் தான தர்மங்களின் தொடர்பு என்பது உண்மையில் சமூகத்துடன் உள்ளது. ஒரு தனிப்பட்ட நபரை சார்ந்ததாக இல்லை. அதன் விளைவுகள் மற்றும் தாக்கங்களின் தொடர்புகள் சமூகத்துடன் உள்ளதே தவிர தனி நபருடன் இல்லை.

(ஸஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸக்காத் தொகுதி 3 பக்கம் 14, 15)

ஓர் அறிவிப்பிற்கேற்ப அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபாவே! மக்களின் உள்ளத்தை ஈர்ப்பதும், அவர்களுடன் மென்மையாக நடந்து கொள்வதும் அவசியமாகும். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், அறிவீனமான காலத்தில் நீங்கள் பெரும் வீரராக இருந்தீர்கள். இஸ்லாத்தில் தற்போது இவ்வாறு கோழைத்தனத்தை வெளிப்படுத்துகின்றீர்களே என்று கூறினார்கள்.

(மிஷ்காத் அல் மஸாபிஹ் தொகுதி 2 கிதாப் அல்ஃபஸாயில் வ ஷமாயில் ஹதீஸ் எண் 6024 பக்கம் 492 – மக்காவிலுள்ள தாருல் அர்கமில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஸகாத் கொடுக்க

மறுத்தவர்களின் நடைமுறையால் அவர்களுடன் போர் செய்வது தொடர்பாகவும், அதனால் நம்மவர்கள் மற்றும் அந்நியர்கள் மீது என்ன தாக்கம் வெளிப்பட்டது என்பது தொடர்பாகவும் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

இன்றும் மீண்டும் நான் தற்போதைய உலகத்தின் சூழல் தொடர்பாக, நிலைமைகள் தொடர்பாக கூற விரும்புகின்றேன். துஆ செய்யுங்கள். அல்லாஹ் இரு தரப்பு அரசாங்கங்களுக்கும் அறிவை வழங்கட்டுமாக. புரிதலை வழங்கட்டுமாக. மனித இனத்தின் இரத்தத்தை சிந்துவதிலிருந்து அந்த மக்கள் விலகி இருக்கட்டும். அத்துடன் இந்தப் போரிலிருந்து நாமும், முஸ்லிம்களும் படிப்பினை பெற வேண்டும். அந்த மக்கள் எவ்வாறு ஒன்றுபட்டு விட்டனர். ஆனால் முஸ்லிம்கள் ஒரு கலிமாவை கூறுபவர்களாக இருந்தபோதிலும் ஒருபோதும் ஒன்றுபடுவதில்லை.

முதலில் நாட்டை அழித்தனர். ஈராக்கை அழித்தனர். சிரியாவை அழிக்கச் செய்தனர். ஏமன் நாட்டை அழித்துக் கொண்டிருக்கின்றனர். அந்நியர்களைக் கொண்டு அழிக்கச் செய்கின்றனர். தாமும் அழிக்கின்றனர். ஒன்றுபடுவதற்கு பகரமாக பிளவுபட்டு நிற்கின்றனர். இந்த ஒற்றுமையின் பாடத்தை குறைந்தபட்சம் முஸ்லிம்கள் இந்த மக்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்தின் மீது கருணை காட்டுவானாக. முஸ்லிம்கள் மீதும் கருணை காட்டுவானாக. முஸ்லிம் உம்மத்தின் மீதும் கருணை காட்டுவானாக. இது எப்போது நடக்க முடியுமென்றால் இந்த மக்கள் காலத்தின் இமாமை ஒப்புக் கொள்பவர்களாக ஆகி விட வேண்டும். அல்லாஹ் அவரை இந்த நோக்கத்திற்காகவே அனுப்பியுள்ளான். அல்லாஹ் அறிவையும், புரிதலையும் வழங்குவானாக. அத்துடன் எங்கு இவர்கள் தமது நிலைமைகளை சரி செய்பவர்களாக இருக்க வேண்டுமோ அங்கு உலகிற்காகவும் துஆ செய்ய வேண்டும். தமது வசதிகளையும், வழிமுறைகளையும் பயன்படுத்தி உலகை போர்களிலிருந்து தடுப்பவர்களாக இருக்க வேண்டுமேயொழிய போர்களில் சுயமே பங்கு பெறுபவர்களாக இருக்கக் கூடாது.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அது ஸய்யிதா கைஸர் ஃஸபர் காஸிமி சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் லாஹூரைச் சார்ந்த ஸஃபார் இக்பால் ஹாஷிமி சாஹிப் அவர்களுடைய மனைவி ஆவார்கள். அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூமா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் செய்யது முஹம்மது அலி புகாரி சாஹிப் (ரலி) அவர்களின் மகன்வழிப் பேத்தி ஆவார்கள். மர்ஹூமா செய்யது நஸீர் அஹ்மது புகாரி சாஹிப் அவர்களது குடும்பத்தில் பிறந்தார்கள். திருமணத்திற்குப் பிறகு பல்வேறு இடங்களில் அன்னார் வசித்து வந்தார்கள். 1961 ஆம் ஆண்டு அன்னாரின் திருமணம் நடைபெற்றது. அதன் பிறகு 1981 ஆம் ஆண்டில் அல்லாமா இக்பால் டவுண் லாஹூருக்கு இடம் பெயர்ந்து சென்றார்கள். அங்கு லஜ்னா அமைப்பில் தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். தலைவியாகவும், செயலராகவும் தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்து வந்தது.

நோன்பு மற்றும் தொழுகையை பேணுபவராக இருந்தார்கள். துஆ செய்பவராகவும், அனுதாபம் கொண்டவராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும், பொறுமை மற்றும் நன்றியுணர்வு கொண்ட பெண்மணியாகவும், மிகவும் நல்ல மற்றும் தூய பெண்மணியாகவும் மர்ஹூமா இருந்தார்கள்.

கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பும், கட்டுப்படுதலுக்கான தொடர்பும் கொண்டிருந்தார்கள். பொருளாதார திட்டங்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கெடுத்து வந்தார்கள். வருடத்தின் ஆரம்பத்திலேயே சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள்.

மர்ஹூமா விட்டுச் சென்றவர்களில் மர்ஹூமாவின் கணவர் மட்டுமின்றி 5 மகன்களும், 1 மகளும் உள்ளனர். ஒரு மகனான மஹ்மூத் இக்பால் ஹாஷிமி சாஹிப் இறைவழி கைதியாக உள்ளார்கள். இன்றைய நாட்களில் லாஹூரில் சிறைச்சாலையில் உள்ளார்கள். அவருக்கு சிறையிலிருந்து வெளியே வருவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. எனினும் தாயாரின் மையத்தை சிறைக்குள் கொண்டு சென்று தனது தாயாரை கடைசியாக பார்ப்பதற்கு அனுமதி அளித்து நிர்வாகம் மென்மையாக நடந்து கொண்டுள்ளது.

அஹ்மதிகளுக்கெதிராக இஸ்லாமிய அடையாளங்களை பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் வழக்கு பதிந்து ஜனாஸா தொழுவதற்கும் கூட சிறையிலிருந்து வெளியேற்றப்படுவதில்லை. இந்த அளவிற்கு பெரும் பெரும் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அதே நேரம் பெரும் பெரும் கொலையாளிகளுக்கு சிறையை விட்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இந்த நாட்டின் அரசாங்கங்களின் மீது கருணை புரிவானாக.

மஹ்மூத் இக்பால் சாஹிப் மற்றும் அன்னாரின் 3 தோழர்களுக்கு எதிராக 2019 ஆம் ஆண்டில் ஜூன் மாதம் வழக்கு பதியப்பட்டது. அவர்களுக்கு ஜாமீனும் கிடைத்திருந்தது. ஆனால் பின்னர் ஆகஸ்ட் 2021 ஆம் ஆண்டில் ஜாமீன் ரத்து செய்யப்பட்டது. மேலும் நீதிமன்றத்திலேயே அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டு விட்டார்கள். அல்லாஹ் அவர்களின் விடுதலைக்காகவும் விரைவாக ஏற்பாடு செய்வானாக.

மர்ஹூமாவின் ஒரு மகன்வழிப் பேரன் ஹாஷிம் இக்பால் ஹாஷிமி சாஹிப் இங்கு யூ.கேவில் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார். அல்லாஹ் தனது தந்தைவழிப் பாட்டியின் நன்மைகளின்படி அமல் செய்வதற்கு அன்னாருக்கு நற்பேறு வழங்குவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அமல் செய்வதற்கு நற்பேறு வழங்குவானாக. மர்ஹூமாவுடன் அல்லாஹ் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

*(12 வது பக்கத்தின் தொடர்ச்சி... குத்பா ஜுமுஆ)*

ஒரு நாள் மருத்துவமனையிலிருந்து வந்தார்கள். உடல்நிலை நோயுற்றிருந்தது. ஃபஜர் தொழுகையை தொழுதார்கள். பின்னர் தயாராகி அலுவலகத்திற்கும் சென்று விட்டார்கள். அவர்கள் தடுக்கப்பட்டார்கள். ஆனால் இதுவே ஒரு வாழ்க்கையை அர்ப்பணித்தவரின் பணியாகும். எனது பணியிலிருந்து என்னை தடுக்க வேண்டாம் என்று கூறினார்கள்.

அன்னாரின் மகனான மதிப்பிற்குரிய நாஸிர் இஸ்லாம் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து தந்தையாரை தஹஜ்ஜுத் தொழுகையாளியாக நான் கண்டுள்ளேன். கட்டுப்படுதலின் உயர்ந்த அந்தஸ்தை பெற்றிருந்தார்கள். ஒருவர் ஜமாஅத்தின் சிறிய பொறுப்பாளராக இருந்தாலும் சரி அல்லது பெரிய பொறுப்பாளராக இருந்தாலும் சரி அவருக்கு கட்டுப்படுவார்கள். தினமும் தான தர்மங்கள் செய்வது அன்றாட நடவடிக்கையாக இருந்தது. அன்றைய பணியை அன்றே செய்து வந்தார்கள். எல்லாரையும் சந்தித்து வந்தார்கள். தப்லீக்கில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது தந்தையை தொழுகைக்கு செல்லும்போதும், திரும்பி வரும்போதும் அல்லது காலை நேர நடை பயணத்தின்போதும் இங்கு ஆஃப்ரிக்காவிலும் ஒரு ஹோட்டலில் அமர்ந்திருப்பதையும் நான் கண்டுள்ளேன். அங்கு உணவு உண்ணும் நேரத்திலோ அல்லது காத்திருப்பு அறையிலோ எங்கு அவர்கள் அமர்ந்திருந்தாலும் அங்கு அமர்ந்து காத்திருக்கின்ற நேரத்தில் போலீஸ் அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது இராணுவ அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது யாரை சந்தித்தாலும் அவர்களுக்கு தப்லீக் செய்வார்கள். தப்லீக்கிற்கான எந்தவொரு வாய்ப்பையும் விட்டு விட மாட்டார்கள். யாரை எங்கு கண்டாலும் தப்லீக் செய்வார்கள். எனவே யாராவது ஒரு நபர் தென்பட்டு விட்டால் தற்போது நமது அப்பாவிற்கு ஒரு நபர் தென்பட்டு விட்டார். இனி அவரிடமிருந்து அந்த நபர் தப்பிக்க முடியாது. அவருக்கு தப்லீக் செய்த பிறகே அவரை அவர் விடுவார் என்று நாங்கள் கூறி வந்தோம்.

தொடர்ந்து அன்னாரின் ஒரு மகன் கூறுகின்றார்: தந்தை இவ்வாறு கூறினார்கள்: ஆஃப்ரிக்காவில் தப்லீக் அடிப்படையில் ஏராளமான விவகாரங்கள் வந்த வண்ணம் இருந்தன. அதிகமாக துஆக்கள் செய்தார்கள். தஹஜ்ஜுத் தொழுதார்கள். அப்போது எனது இயல்பில் தோல்விக்கான அடையாளம் இல்லை என்ற சப்தம் அறையில் வந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: இதன் பிறகு அடுத்த நாள் தப்லீக் அடிப்படையில் என்ன தடை இருந்ததோ அது நீங்கி விட்டது.

எவ்வாறிருப்பினும் அன்னாரைப் பற்றி ஏராளமான மக்கள் சம்பவங்களை எழுதியுள்ளனர். அன்னார் எல்லாரையும் சந்தித்து வந்தார்கள். பணிவுமிக்கவராக இருந்தார்கள். துஆ செய்யக் கூடியவராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு இருந்தது. அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளக் கூடிய மனிதராக அன்னார் இருந்தார்கள் என்று அன்னாரைக் குறித்து அனைவருமே எழுதியுள்ளனர்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளிடமும் அன்னாரின் நன்மைகளை நிலைபெறச் செய்வதற்கு நற்பேறு வழங்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு தப்லீக் மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

அதனை எடுத்துரைக்கலாம் என எண்ணி இருந்தேன். எனவே நான் அவர்களிடம் சென்றடைந்தேன். விஷயத்தை துவங்குவதற்காக முன்னால் சென்றேன். ஆனால் நில்லுங்கள். நில்லுங்கள் என்று என்னிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எந்த அளவுக்கென்றால் நான் பேசுவேன். அதன் பிறகு உங்களது உள்ளம் எதை விரும்புமோ அதைப் பேசிக் கொள்ளலாம் என்று ஹஸ்ரத் அபூபக்ர் ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பேசத் தொடங்கி விட்டார்கள். நான் பேச விரும்பியிருந்த விஷயங்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்துரைத்து விட்டார்கள். இன்னும் கூறப்போனால் அதை விட அதிகமாக அன்னார் (ரலி) அவர்கள் கூறியிருந்தார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 242 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இதுவாகும். அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சொற்பொழிவை தொடங்கினார்கள். அல்லாஹ்வின் புகழை எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் தனது படைப்பினத்தின் பக்கம் முஹம்மது (ஸல்) அவர்களை தனது தூதராகவும், தனது சமுதாயத்தின் பொறுப்பாளராகவும் அனுப்பியுள்ளான். ஏனென்றால் இந்த உம்மத்தைச் சார்ந்தவர்கள் அல்லாஹ்வை வணங்க வேண்டும். மேலும் அவர்களுக்கு ஏகத்துவத்தின் பக்கம் உடன்படிக்கையை பெற வேண்டும் என்பதாகும். ஆனால் இதற்கு முன்பு அல்லாஹ்வை தவிர்த்து பல்வேறு பொய் தெய்வங்களை அவர்கள் வணங்கி வந்தனர். இந்த சிலைகள் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் பரிந்துரை செய்யக் கூடியதும், பயனளிக்கக் கூடியதும் ஆகும் என்று கூறுகின்றனர். ஆனால் உண்மையில் அந்த சிலைகள் கல்லால் வைக்கப்பட்டதாகும். மேலும் மரக் கட்டைகளால் உருவாக்கப்பட்டவையாக இருந்தன.

பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள்.

وَيَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ وَيَقُوْلُوْنَ هٰٓؤُلَآءِ شُفَعَآؤُنَا عِنْدَ اللهِ

பொருள்: அவர்கள் அல்லாஹ்வை விட்டு விட்டு அந்த சிலைகளை வணங்குகின்றனர். அந்த சிலைகளால் அவர்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. எந்த பயனையும் தர முடியாது. அல்லாஹ்வின் சந்நிதானத்தில் இவை அனைத்தும் எங்களுக்கு பரிந்துரை செய்யும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُوْنَآ اِلَى اللهِ زُلْفٰى

பொருள்: அவை எங்களை அல்லாஹ்விற்கு நெருங்கியவர்களாக ஆக்கி உயர்ந்த அந்தஸ்தை சென்றடையச் செய்யும் என்ற இந்த நோக்கத்தை தவிர்த்து வேறு எதற்காகவும் நாங்கள் அதனை வணங்கவில்லை. அரேபியர்களுக்கு இந்த விஷயம் கடினமாக இருந்தது. அதாவது அரேபியர்கள் தங்களின் மூதாதையர்களின் மார்க்கத்தை விட்டு விடுவது அவர்களுக்கு கடினமான காரியமாக இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனங்களை ஓதி இவ்வாறு கூறினார்கள்: அரேபியர்கள் தங்களின் மூதாதையர்களின் மார்க்கத்தை விட்டு விடுவது அவர்களுக்கு கடினமான காரியமாக இருந்தது. எனவே அல்லாஹ் அன்னார் (ஸல்) அவர்களின் சமுதாயத்திலிருந்து முதலில் முஹாஜிர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஒப்புதலுக்காகவும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்வதற்காகவும் மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் துயரத்தை துடைப்பதற்காகவும், தனது சமுதாயத்தினர் அன்னார் (ஸல்) அவர்களுடன் கடுமையான துன்பம் கொடுத்து பொய்ப்படுத்துகின்ற நிலையில் உறுதியுடன் நிலைநிற்பதற்காகவும் அவர்களை தேர்ந்தெடுத்தான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உண்மையில் அனைத்து மக்களும் அன்னாருக்கு எதிரிகளாக இருந்தனர். அன்னார் (ஸல்) மீது அநீதியிழைத்து வந்தனர். குறைவான எண்ணிக்கையில் இருந்தபோதிலும் அநீதி மற்றும் அக்கிரமங்களில் தமக்கெதிராக அன்னாரின் சமுதாயத்தின் மக்கள் ஒன்றுகூடியபோதிலும் அன்னார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் அச்சமடையவில்லை. (முஹாஜிர்களாகிய) அவர்கள் பூமியில் அல்லாஹ்வை வணங்கி வந்தனர். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது நம்பிக்கை கொண்டனர். அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நண்பர்களும், குடும்பத்தைச் சார்ந்தவர்களும் ஆவர். அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த பதவிக்கு மக்களில் அதிக உரிமை படைத்தவர்கள் அவர்களே ஆவர். இந்த விவகாரத்தில் அநீதியாளரைத் தவிர்த்து வேறு எவரும் அவர்களுடன் சண்டையிட மாட்டார். அன்ஸார் கூட்டத்தினரே! நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், மார்க்கத்தின் மேன்மையிலும், இஸ்லாத்திலும் நீங்கள் முன்னேறியவர்கள் என்பதை எவரும் நிராகரிக்க முடியாது. அல்லாஹ்வின் மார்க்கம் மற்றும் அவனது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உதவியாளராக ஆகியதன் காரணமாக அல்லாஹ் உங்களிடம் திருப்தி கொண்டு விட்டான். உங்களுக்காகவே, உங்களை நோக்கியே இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தையும் அவன் அமைத்தான். அன்னார் (ஸல்) அவர்களின் பெரும்பாலான தூய இணையர்கள் மற்றும் சஹாபிகள் உங்களிடத்திலேயே வசித்து வருகின்றனர். முதன்மையான முஹாஜிர்களுக்குப் பிறகு எங்களின் பார்வையில் வேறு எவரும் உங்களின் அந்தஸ்துடன் போட்டி போட முடியாது. நாங்கள் அமீராக இருப்போம். நீங்கள் அமைச்சராக இருப்பீர்கள். ஒவ்வொரு முக்கிய விவகாரங்களிலும் உங்களுடன் ஆலோசனை செய்யப்படும். உங்களைத் தவிர்த்து விட்டு முக்கிய விவகாரங்களில் முடிவெடுக்க மாட்டோம்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 242, 243 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சகீஃபா பனூ சாயிதாவில் ஆற்றிய சொற்பொழிவு பற்றி சீரத் ஹலபியா என்ற நூலில் இவ்வாறு குறிப்பு வருகின்றது. அன்னார் (ரலி) கூறினார்கள்: அம்மா பஃது. கிலாஃபத்தின் விவகாரத்தைப் பொறுத்தவரை அரபு கோத்திரங்கள் குரைஷியர்களைத் தவிர்த்து ஏனைய எந்த கோத்திரத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். குரைஷிய மக்கள் தங்களது குடும்ப பாரம்பரியத்தின் அடிப்படையிலும் மேலும் மக்கா என்ற நாட்டின் அடிப்படையிலும் மிக உயர்ந்தவர்களாக இருக்கின்றனர். நாங்கள் பரம்பரையில் அனைத்து அரபு கோத்திரங்களுடனும் இணைந்துள்ளோம். ஏனென்றால் குரைஷியர்களுடன் ஏதாவதொரு வகையில் உறவு வைத்துக் கொள்ளாத எந்த கோத்திரமும் இல்லை. முஹாஜிர்களாகிய நாங்கள் எப்படிப்பட்ட மக்கள் என்றால் நாங்களே முதன் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டோம். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சகோதரர்களாகவும், குடும்பத்தின் மக்களாகவும், அன்னார் (ஸல்) அவர்களின் உறவினர்களாகவும் நாங்களே இருக்கின்றோம்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 504, 505 –2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதே சம்பவங்களை குறிப்பிட்டவாறு அஹ்மது பின் ஹம்பல் முஸ்லித் என்ற தனது நூலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் குணத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். இதைக் குறிப்பிட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது முஸ்லிம்களுக்கு மத்தியில் வருகை தந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவையும் அன்னார் (ஸல்) அவர்களின் மரணத்தின் அறிவிப்பை செய்ததையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பின்னர் மீண்டும் கூறப்பட்டுள்ளது. அறிவிப்பாளர் கூறுகின்றார்: இதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விரைவாக சகீஃபா பனூ சாயிதாவை நோக்கி சென்றார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்களிடம் சென்றடைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பேசத் தொடங்கினார்கள். மேலும் அன்னார் (ரலி) அவர்கள் அன்ஸார் சகோதரர்களைக் குறித்து திருக்குர்ஆனில் இறங்கியவற்றுள் எதனையும் விட்டு வைக்கவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 14 April 2022 Issue No. 15

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார் சகோதரர்களின் மேன்மையாக கூறி அனைத்தையும் அன்னார் (ரலி) எடுத்துரைத்தார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு தெரியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார்கள். மக்கள் ஒரு பள்ளத்தாக்கில் சென்று, அன்ஸார் சஹாபிகள் வேறொரு பள்ளத்தாக்கில் சென்றால் நான் அன்ஸார் சகோதரர்களின் பள்ளத்தாக்கிலேயே செல்வேன் என்று அன்னார் (ஸல்) கூறியிருந்தார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களை நோக்கி பேசியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சஅதே! உமக்கு தெரியும். நீர் அமர்ந்திருந்தீர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிலாஃபத்திற்கு குரைஷிகள் உரிமை படைத்தவர்கள் ஆவர் என்று கூறினார்கள். மக்களில் நல்லவராக இருப்பவர்கள் குரைஷியர்களில் நல்ல நபர்களை பின்பற்றுவார்கள். மேலும் தீயவர்களாக இருப்பவர்கள் குரைஷியர்களில் தீயவர்களைப் பின்பற்றுவார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் அல்லவா? அதற்கு தாங்கள் உண்மையை கூறியுள்ளீர்கள். நாங்கள் அமைச்சர்கள் ஆவோம். நீங்கள் அமீர்மார்கள் ஆவீர்கள் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல், முஸ்னத் அபீபக்ர் ஹதீஸ் எண் 18 தொகுதி 1 பக்கம் 158, 159 – 1994 ஆம் தாருல் ஹதீஸ் காஹிராவில் அச்சிடப்பட்டது)

இந்த நற்குறிப்பு இன்னும் தொடர்ந்து கொண்டே செல்லும். இன்ஷா அல்லாஹ்.

உலகின் தற்போதைய நிலைமைகளைக் குறித்தும் நான் துஆவிற்காக கூற விரும்புகின்றேன். மிக அபாயகரமான நிலைமை ஏற்பட்டு விட்டது. மேலும் ஏற்படும். அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர். முன்னேறிச் செல்கின்றனர். ஒரு நாடு மட்டுமல்ல. மாறாக, ஏராளமான நாடுகள் இதில் இணைந்து விடும். ஒருவேளை இந்த நிலைமை இவ்வாறே அதிகரித்துக் கொண்டே சென்றால் பின்னர் அதன் அபாயகரமான முடிவின் தாக்கங்கள் (பல) தலைமுறைகள் வரை இருக்கும். இறைவனை அடையாளம் காண்பவர்களாக அந்த மக்களை இறைவன் ஆக்குவானாக. மேலும் தமது உலக ஆசைகளின் திருப்திக்காக மனித உயிர்களுடன் இவர்கள் விளையாடாமல் இருக்கட்டுமாக.

எவ்வாறிருப்பினும் நம்மால் துஆ மட்டுமே செய்ய முடியும். நாம் அதனை செய்கின்றோம். புரிய வைக்க முடியும். புரிய வைக்கவும் செய்கின்றோம். ஒரு நீண்ட காலமாக நாம் இந்த பணியை செய்து வருகின்றோம். எவ்வாறிருப்பினும் இந்த நாட்களில் குறிப்பாக அஹ்மதிகள் அதிகமாக துஆ செய்ய வேண்டும். போரின் அபாயகரமான நிலைமைகள் உள்ளன. கற்பனை செய்து பார்க்க முடியாத அழிவுகள் உள்ளன. அதுபோன்ற நாசங்கள், அழிவுகள் ஏற்படக் கூடும். அல்லாஹ் அவற்றிலிருந்து மனித இனத்தை பாதுகாத்து வைப்பானாக.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அது ஜமாஅத்தின் முரப்பி மதிப்பிற்குரிய குஷி முஹம்மது ஷாகிர் சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் அன்னார் 69 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மவ்லவி கரீம் பக்ஷ் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் பிளேக் நோயின் அடையாளத்தைக் கண்டு பைஅத் செய்திருந்தார்கள். அதேபோன்று ஹஸ்ரத் மவ்லவி கரீம் பக்ஷ் சாஹிப் அவர்களின் மனைவியான ஃபஸல் பீபீ சாஹிபா அவர்களின் சகோதரர் ஹஸ்ரத் ஹாஜி முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் அவர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களில் பைஅத் செய்வதற்கு நற்பேறு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் ஹாஜி முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் பெயர் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் தொகுதி 8ல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் சஹாபிகளின் பட்டியலில் 23 வது எண்ணில் பதியப்பட்டுள்ளது.

(ஸமீமா தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 6 பக்கம் 11)

முஹம்மது ஷாகிர் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை பொறுத்தவரை அன்னார் 1969 ஆம் ஆண்டில் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார்கள். பின்னர் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் நுழைந்தார்கள். 1977 ஆம் ஆண்டில் ஜாமிஆவிலிருந்து ஷாஹிது பட்டம் பெற்றார்கள். 1978 ஆம் ஆண்டில் அரபி ஃபாஸில் தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். பின்னர் ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வந்தார்கள். அத்துடன் அன்னார் 1987 ஆம் ஆண்டில் MA இஸ்லாமியாத் பட்டம் பெற்றார்கள். அதுமட்டுமின்றி பாகிஸ்தானில் மட்டுமல்லாமல் கினிகனாகிரி போன்ற இடங்களில் ஜமாஅத்தின் முரப்பியாக தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்துள்ளது. அங்கு பிரென்ச் மொழியில் டிப்ளமோ பெற்றார்கள். அல்லாஹ் அன்னாருக்கு 6 மகன்களை வழங்கியுள்ளான். அன்னாரின் ஒரு மகனான நாஸிர் இஸ்லாம் சாஹிப் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார்கள். தற்போது ரப்வாவிலேயே பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

1977 முதல் 1991 வரை பாகிஸ்தானில் பல்வேறு பகுதிகளில் தொண்டாற்றுவதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்துள்ளது. 1991 முதல் 2007 ஆம் ஆண்டு வரை சிராலியோன் மற்றும் கினிகனாரியில் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. அங்கிருந்து திரும்பி வந்தபோது 2008 லிருந்து அஞ்ஜுமனின் அலுவலகங்களின் பல்வேறு துறைகளில் பணியாற்றும் நற்பேறு கிடைத்தது. அடிஷனல் நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாத், உள்ளூர் மற்றும் நஸாரத் உமூரே ஆமா ஆகிய துறைகளிலும் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்துள்ளது. அன்னார் ஆஃப்ரிக்காவில் இருந்தபோது ஏராளமான நல்ல ஆன்மாக்களுக்கு அன்னார் மூலமாக அஹ்மதிய்யத்தில் நுழைவதற்கு நற்பேறு கிடைத்தது. பல ஜமாஅத்துகள் உருவாகி உள்ளன. மிகவும் தன்னலமற்ற நபராகவும், கடின உழைப்பு செய்யக் கூடிய முபல்லிக் ஆகவும் அன்னார் இருந்தார்கள். தப்லீக் மைதானத்தில் அன்னாருடைய ஈமானை வலுவூட்டக் கூடிய ஏராளமான சம்பவங்கள் இருக்கின்றன. பல்வேறு மக்கள் அதனை எடுத்துரைத்துள்ளனர். அல்லாஹ் அன்னாருக்கு எவ்வாறு உதவி செய்து வந்தான்? என்பதையும் கூறியுள்ளனர். 1986 ஆம் ஆண்டில் ஜூலை மாதம் கலிமா தய்யுபா வழக்கில் இறைவழி சிறைக் கைதியாக இருப்பதற்கும் நற்பேறு கிடைத்துள்ளது.

அன்னாரின் துணைவியார் எழுதுகின்றார்கள்: அன்னார் இன்று வரை தொழுகையையும் விட்டதில்லை. ஒருபோதும் தஹஜ்ஜுத்தையும் விட்டதில்லை என்பதற்கு எனது முழு வாழ்க்கையும் சாட்சியாக உள்ளது. சுற்றுப் பயணத்திலிருந்து திரும்பி வருவார்கள். சோர்வு இருக்கும். இருந்தபோதிலும் தொழுகையை நிச்சயம் நிறைவேற்றுவார்கள். ஜமாஅத்தாக நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வார்கள். கடுமையான நோயின்போது நடப்பதற்கு சிரமமாக இருக்கும். இருந்தபோதிலும் ஜமாஅத்தாக தொழுவதற்கு கண்டிப்பாக செல்வார்கள். எண்ணற்ற சிறப்புகளுக்கு எஜமானராக இருந்தார்கள். அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதில் எப்போதும் மும்முரமாக இருப்பார்கள். இறையச்சத்தின் நுட்பமான வழிகளில் நடப்பவராகவும், கிலாஃபத்தின் மீது உறுதிமிக்க பற்று கொண்டவராகவும், கட்டுப்படுபவராகவும் இருந்தார்கள். எளியவராகவும், பணிவுமிக்கவராகவும் இருந்தார்கள்.

முரப்பிமார்கள் மற்றும் ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு கண்ணியம் அளித்து வந்தார்கள். பிள்ளைகளுடன் பரிவுடனும் நடந்து வந்தார்கள். வள்ளல் தன்மை கொண்டிருந்தார்கள். உறவினர்களையும், ஏழைகளையும் பராமரித்து வந்தார்கள். எல்லாரையும் சந்தித்து வந்தார்கள். தப்லீக்கில் சிறப்பான ஆர்வம் கொண்டிருந்தார்கள். நோயின் இறுதி நாட்களிலும் அதாவது உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் இருந்தபோதும் மூன்று பகல், மூன்று இரவு வரை அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் கொண்டு செல்லப்பட்டிருந்தார்கள். வீட்டிற்கு திரும்பி வந்தபோதெல்லாம் வீட்டிற்கு வந்தவுடன் தஹஜ்ஜுத் தொழுகையை அன்னார் ஒருபோதும் கைவிட்டதில்லை.

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad